## (ஈ) பணம், வங்கித்தொழில் ஆகியவற்றின் அபிவிருத்திகள்

### 1. (அ) பண நிரம்பல் — முக்கிய போக்குகள்

*பண நிரம்பலானது, சென்ற ஆண்டின் ரூ. 301 இலட்சம் அல்லது 1.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாருக, 1970ஆம் ஆண்டில் ரூ. 835 இலட்சத்தால் அல்லது 4.5 சதவீதத்தால் அதிகரித்தது. 1970ஆம் ஆண்டுப் பண நிரம்பலின் மாதாந்தச் சராசரி மட்டம், சென்ற ஆண்டினதிலும் பார்க்க 40 சதவீதம் அதிகமாகவிருந்தது.*

*ஆண்டிறுதி எண்தொகைகளின் ஒப்பீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளவாருன பண நிரம்பலின் அதிகரிப்பு, இவ்வாண்டின்போதான நாணய விரிவின் உண்மைப் போக்குகளைப் போதியளவிற்குப் பிரதிபலிக்கவில்லை. அட்டவணை II (ஈ) 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, சனவரி மாதத்தில் ஏற்பட்ட ரூ. 110 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, பண நிரம்பலானது, யூலை மாதத்து ரூ. 65 இலட்சம் கொண்ட சிறு வீழ்ச்சியைத் தவிர்த்து, ஒற்ருேபர் வரை நிலையாக அதிகரித்துள்ளது. 1969 திசெம்பர் இறுதிக்கும் 1970 ஒற்ருேபர் இறுதிக்குமிடையில் பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 1844 இலட்சமாக அல்லது 9.8 சதவீதமாக விளங்கியது. 1970ஆம் ஆண்டினது முதல் பத்து மாதங்களின் மாதாந்தச் சராசரி அளவும் ரூ. 1973 இலட்சமாக அமைந்து, ஆண்டு முழுவதிற்குமான சராசரி அளவாகிய ரூ. 1968 இலட்சத்திலும் பார்க்க அதிகமாகவிருந்தது.*

*இவ்வாண்டின் முதல் பத்து மாதங்களிலும் பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கான பிரதான காரணி, அரசாங்கத்திற்கான வங்கிக் கொடுகடன் விரிவாகும். தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் அதிகரிப்பை, அரசாங்கத்திற்கான வங்கிக் கொடுகடன் அதிகரிப்பினது விரிவுத் தாக்கத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவாயிருப்பினும், இவ்வதிகரிப்பும் இவ்விரிவிற்குக் காரணமாயிருந்தது.*

*இவ்வாண்டின் முதல் பத்து மாதங்களினது நாணய விரிவின் உயர்ந்த வீதம், முக்கியமாக 1970 ஒற்ருேபர் 25இல் ரூ. 100, ரூ. 50 இன நாணயத் தாள்களில் பண மதிப்பு நீக்கத்தால் நிறுத்தப்பட்டு, உண்மையில் நவெம்பர் மாதத்தில் மாற்றியமைக்கப்பட்டது. நவெம்பர் மாதத்தில் பண நிரம்பலானது, பண மதிப்பு நீக்கத்தால் ரூ. 1409 இலட்சத்தால் கடுமையாக வீழ்ச்சியுற்றது. அரசாங்கப் பண நிலுவைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருக்கையில், அரசாங்கத்திற்கான வங்கிக் கொடுகடன் வீழ்ச்சியுற்று நவெம்பர் மாதப் பண நிரம்பலில் குறிப்பிடத்தக்களவு சுருக்கத்தை ஏற்படுத்தியது. திசெம்பரில், பெரும்பாலும் அரசாங்கத் தொழிற்பாடுகளினுல் பண நிரம்பல் மீண்டும் ரூ. 399 இலட்சத்தால் அல்லது 2.1 சதவீதத்தால் உயர்வுற்ற போது இப்போக்கு மாற்றியமைக்கப்பட்டது.*

*இவ்வாண்டின் முதல் பத்து மாதங்களிலும் பண நிரம்பலில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கையில், சுற்ருேட்ட வேகத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டதாகத் தெரிகின்றது. சுற்ருேட்ட வேக மாற்றத்தின் ஓரளவு குறிகாட்டியாக மட்டுமேயிருக்கும் பொதுமக்களின் கேள்வி வைப்புக்களைப் பயன்படுத்தும் மாதாந்தச் சராசரி வீதம், இக்காலப்பகுதியில், 1969ஆம் ஆண்டின் மாதாந்தச் சராசரியிலும் பார்க்க 6.2 சதவீதத்தால் உயர்வுற்றது. ஆயினும், 1970ஆம் ஆண்டின் இறுதி இரு மாதங்களிலுமான சராசரி, முதற் பத்து மாதச் சராசரியிலும் பார்க்க 21.2 சதவீதம் குறைவுற்றிருந்தது. இதனைப் பண நிரம்பலின் வீழ்ச்சியுடன் நோக்குகையில், இவ்வாண்டின் இறுதி இரு மாதக் கொடுக்கல்வாங்கல்களின் அளவிலும் குறைவைக் காட்டக்கூடும்.*

# அட்டவணை II (ச) 1

## பணநிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்.

| கால முடிவில் | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | சதவீத மாற்றம் 1966—65 | சதவீத மாற்றம் 1967—56 | சதவீத மாற்றம் 1968—67 | சதவீத மாற்றம் 1969—68 | சதவீத மாற்றம் 1970—69 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி ... | 1,615 | 1,693 | 1,598 | 1,792 | 1,883 | 1,872 | + 4.8 | — 5.6 | + 12.1 | + 5.1 | — 0.6 |
| பெப்புருவரி .. | 1,582 | 1,674 | 1,687 | 1,793 | 1,880 | 1,884 | + 5.8 | + 0.8 | + 6.3 | + 4.8 | + 0.2 |
| மாச்சு ... | 1,585 | 1,666 | 1,817 | 1,831 | 1,911 | 1,932 | + 5.1 | + 9.1 | + 0.8 | + 4.4 | + 1.1 |
| ஏப்பிறல் ... | 1,601 | 1,675 | 1,781 | 1,857 | 1,917 | 1,942 | + 4.6 | + 6.3 | + 4.3 | + 3.2 | + 1.3 |
| மே ... | 1,645 | 1,698 | 1,723 | 1,869 | 1,900 | 1.974 | + 3.2 | + 1.5 | + 8.5 | + 1.7 | + 3.9 |
| யூன் ... | 1,650 | 1,692 | 1,731 | 1,857 | 1,918 | 1,990 | + 2.5 | + 2.3 | + 7.3 | + 3.3 | + 3.7 |
| யூலை ... | 1,693 | 1,757 | 1,718 | 1,831 | 1,872 | 1,983 | + 3.8 | — 2.2 | + 6.6 | + 2.2 | + 5.9 |
| ஒகத்து ... | 1,674 | 1,702 | 1,678 | 1,839 | 1,880 | 2,017 | + 1.7 | — 1.4 | + 9.6 | + 2.2 | + 7.3 |
| செத்தெம்பர் .. | 1,675 | 1,681 | 1,700 | 1,850 | 1,885 | 2,066 | + 0.4 | + 1.1 | + 8.8 | + 1.9 | + 9.6 |
| ஒற்றோபர் ... | 1,687 | 1,682 | 1,761 | 1,889 | 1,891 | 2,068 | — 0.3 | + 4.7 | + 7.3 | + 0.1 | + 9.4 |
| நவெம்பர் ... | 1,677 | 1,655 | 1,787 | 1,896 | 1,902 | 1,927 | — 1.3 | + 8.0 | + 6.1 | + 0.3 | + 1.3 |
| திசெம்பர் ... | 1,716 | 1,659 | 1,808 | 1,913 | 1,883 | 1,967 | — 3.3 | + 9.0 | + 5.8 | — 1.6 | + 4.5 |
| மாதாந்தச் சராசரி ... | 1,650 | 1,686 | 1,732 | 1,851 | 1,893 | 1,968 | + 2.2 | + 2.7 | + 6.9 | + 2.3 | + 4.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி·

## அட்டவணை II (ஈ) 2

### பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களும் அடிப்படைக் காரணிகளும்

### (ஆண்டிறுதி எண்தொகைகளை அடிப்படையாகக் கொண்டவை)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1964–65 | | 1965–66 | | 1966–67 | | 1967–68 | | 1968–69 | | 1969–70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் |
| 1. வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் (தேறிய) .. ... ... | 79.8† | — | — | 196.3 | — | 91.5 | — | 115.7 | — | 299.6 | — | 1.5 |
| 2. தனியார் துறை†† ... .. ... ... | 19.2 | 75.4 | 137.2 | 79.6 | 105.6 | 133.1 | 264.1 | 165.5 | 226.0 | 193.8 | 219.4 | 238.3 |
| (அ) கூட்டுறவு நிலையங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் .. | — | 6.9 | 25.8 | — | 7.3 | — | 18.5 | — | 19.9 | — | 146.3 | — |
| (ஆ) ஏனைய தனியார் துறைப் பகுதிகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் | 10.0 | — | 33.5 | — | 86.9 | — | 155.0 | — | 136.2 | — | — | 42.0 |
| (இ) கூட்டுறவு நிலையங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... .. | — | 2.1 | — | 2.3 | — | 1.4 | — | 1.5 | — | 2.9 | — | 7.6 |
| (ஈ) ஏனைய தனியார் துறைப் பகுதிகளின் தவணை சேமிப்பு வைப்புக்கள் | — | 46.2 | — | 65.3 | — | 49.5 | — | 99.9 | — | 144.4 | — | 188.7 |
| (உ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (தேறிய) ... ... ... ... | — | 20.2 | — | 12.0 | — | 31.0 | — | 40.9 | — | 35.7 | 12.4 | — |
| (ஊ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ... | 7.8 | — | 27.7 | — | 11.4 | — | 90.6 | — | 69.9 | — | 43.2 | — |
| (எ) கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... ... | 1.4 | — | 50.2 | — | — | 51.2 | — | 23.2 | — | 10.8 | 17.5 | — |
| 3. அரசாங்கத் துறை | 120.3 | 53.2 | 207.5 | 125.5 | 267.8 | — | 306.9 | 184.5 | 243.1 | 7.6 | 349.8 | 244.6 |
| (அ) வர்த்தக வங்கிகள் வசமுள்ள இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள், அரசாங்க இறக்குமதி உண்டியல்கள் ஆகிய உடைமைகள் ... .. | 92.3 | — | — | 62.6 | 75.3 | — | — | 114.9 | 4.9 | — | 193.4 | — |
| (ஆ) அரசாங்கக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பண விடயங்கள் .. | — | — | — | — | — | — | — | — | 8.2 | — | 0.7 | — |
| (இ மத்திய வங்கி வசமுள்ள இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடைமைகள் ... .. | — | 38.7 | 155.9 | — | 109.9 | — | 269.4 | — | 112.0 | — | 126.2 | — |
| (ஈ) மத்திய வங்கி முற்பணங்கள் ... ... | 28.0 | — | 26.4 | — | 12.7 | — | 37.5 | — | — | 7.6 | 29.5 | — |
| (உ) மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் (தேறிய) | — | 4.5 | 25.2 | — | 13.9 | — | — | 0.2 | 46.1 | — | — | 120.4 |
| (ஊ) வங்கித் துறையிடமுள்ள அரசாங்க வைப்புக்களும், இறைசேரியிலும், கச்சேரிகளிலுமுள்ள பண மிச்சங்களும் ... | — | 10.0 | — | 62.9 | 56.0 | — | — | 69.4 | 71.9 | — | — | 124.2 |
| 4. இடைப்போக்கிலுள்ள விடயங்களின் சீராக்கங்கள் ... ... ... | 3.2 | — | — | 0.1 | — | 0.1 | 0.2 | — | 1.7 | — | — | 1.1 |
| மொத்த விரிவு/சுருக்கக் காரணிகள் — ... ... | 222.5 | 128.6 | 344.7 | 401.5 | 373.4 | 224.9 | 571.2 | 465.7 | 470.8 | 501.0 | 569.2 | 485.5 |
| பண நிரம்பலின் மாற்றம் ... ... ... .. .. | +93.8 | | —56.8 | | +148.7 | | +105.6 | | -30.1 | | +83.5 | |

மூலம்: இலங்கை வங்கி.

† 1965ம் ஆண்டு மே மாதம் அரசாங்க நிலையங்களிலிருந்து மத்திய வங்கி கொள்வனவு செய்த ரூ. 301 இலட்சம் முகவரிப் பெறுமானமுள்ள வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை உள்ளடக்கும். இக் கொடுக்கல் வாங்கலுக்கு இடமளிக்கும்போது வங்கிகளின் தேறிய வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் ரூ. 496 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றன. அரசாங்க நிலையங்களுக்கான கொடுப்பனவு, ரூபாய்களில் கொடுக்கப்பட்டது. இது பணநிரம்பலில் நேரடி விரிவுத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

†† கழிக்கப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களின் பெறுமானம் வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் கீழ் அடக்கப்பட்டுள்ளன.

* தற்காலிகமானவை.

1. (ஆ) பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள்

பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகளின் பகுப்பாய்வு அட்டவணை II (ஈ) 2 இல் தரப்பட்டுள்ளது.

1970ஆம் ஆண்டுப் பண நிரம்பலின் மீதான பிரதான விரிவுத் தாக்கம் அரசாங்க நிதித் தொழிற்பாடுகளாகும். 1969இன் ரூ. 2355 இலட்சம் கொண்ட தேறிய விரிவுத் தாக்கத்துடன் ஒப்புநோக்குகையில், 1970இல், இவை ரூ. 1052 இலட்சம் கொண்ட தேறிய விரிவுத் தாக்கத்தை விளைவித்தன. ஆயினும், 1970இன் முதல் பத்து மாதங்களிலும் அரசாங்க நிதித் தொழிற்பாடுகளினால் ஏற்பட்ட விரிவு ரூ. 1656 இலட்சமாகும். அடுத்த இரு மாதங்களிலும், நாணய மதிப்பு நீக்கத்தின் விளைவால் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற அதிகரித்த பொருள் வளங்களினால், விரிவுத் தாக்கங்கள் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டன. அரசாங்கப் பண நிலுவைகள், 1969 ஆம் ஆண்டின் ரூ. 719 இலட்சம் கொண்ட குறைவிற்கு மாறாக, 1970இல் ரூ. 1,242 இலட்சத்தால் அதிகரித்தன. ஆயினும், 1970ஆம் ஆண்டின் முதற் பத்து மாதங்களிலும் அரசாங்கப் பண நிலுவைகள் ரூ. 251 இலட்சம் கொண்ட சாதாரண அதிகரிப்பைப் பதிவுசெய்தன.

1970ஆம் ஆண்டில் வங்கித் துறையிடம் அரசாங்கம் பட்ட கடனின் அதிகரிப்பு, சென்ற ஆண்டிலும் பார்க்க ரூ. 2328 இலட்சம் அதிகமாகவிருந்தது. மத்திய வங்கியின் அரசாங்கப் பத்திர உடைமைகள் ரூ. 1262 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், முற்பணங்கள் ரூ. 295 இலட்சத்தால் அதிகரித்து, மத்திய வங்கியிடம் அரசாங்கம் பட்ட கடனில் ரூ. 1557 இலட்சம் கொண்ட மொத்த அதிகரிப்பை விளைவித்தன. வர்த்தக வங்கிகளினால், பெரும்பாலும் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெற் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் ஒன்றுசேர்க்கப்பட்ட பொருள் வரவு முற்பணங்களைக் குறைப்பதற்காக, அரசாங்கமானது மத்திய வங்கியிடமிருந்து அதன் கடன்பாடுகளை அதிகரித்தது.

1969ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூ. 131 இலட்சம் கொண்ட சிறு அதிகரிப்பிற்கு மாறாக 1970இல் அரசாங்கத்திற்கான வர்த்தக வங்கிக் கொடுகடனில் ரூ. 1,941 இலட்சம் கொண்ட கடுமையான விரிவு ஏற்பட்டது. இறைசேரி உண்டியல்களின் ரூ. 2,364 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகளின் ரூ. 485 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், அரசாங்கக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட காசோலைகள் ஆகியன போன்ற வடிவிலுள்ள குறுந்தவணைக் கொடுகடனின் ரூ. 7 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் கொண்டுள்ள இவ்வதிகரிப்பு, அரசாங்க இறக்குமதி உண்டியல்களின் ரூ. 1,418 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினால் ஈடு செய்யப்பட்டது.

ஆகவே, வங்கித் துறையிலிருந்து அரசாங்கத்திற்கான கொடுகடன் அதிகரிப்பினால் ஆக்கப்பட்ட ரூ. 3,498 இலட்சம் கொண்ட மொத்த விரிவுத் தாக்கம், அரசாங்கப் பண நிலுவைகளின் ரூ. 1242 இலட்சம் கொண்ட உயர்வினாலும், மத்திய வங்கியின், ஏனைய பொறுப்புக்களினதும் கணக்குகளினதும் (தேறிய) ரூ 1,204 இலட்சம் கொண்ட அதிகரிப்பினாலும் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டு, அரசாங்கத் துறையில் ரூ. 1,052 இலட்சம் கொண்ட தேறிய விரிவை விளைவித்தது.

1970ஆம் ஆண்டில், தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் அதிகரிப்பு ரூ. 1,475 இலட்சமாக அமைந்து, 1969ஆம் ஆண்டின் ரூ. 2,260 அதிகரிப்பிலும் பார்க்கக் கணிசமானளவு குறைவுற்றிருந்தது. கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன், ரூ. 1,463 இலட்சம் கொண்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இவவதிகரிப்பு, உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு நெல் விற்பனவு செய்வதற்காக வழங்கப்பட்ட பொருள் வரவு முற்பணங்களின் ரூ. 1,443 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், விவசாயக் கொடுகடன் திட்டத்தின் கீழான ரூ. 54 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், ஏனைய கொடுகடனின் ரூ. 34 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும் உள்ளடக்குகின்றது. 1969ஆம் ஆண்டின் ரூ. 116 இலட்சம்கொண்ட வீழ்ச்சிக்கு மாருக, முற்பணங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பிற்கு, உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் அதிகரித்த அளவு நெல்லைக் கொள்வனவு செய்தமையே பெருமளவு காரணமாகும். கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு, 1969இல் 140 இலட்சம் புசல்களிலிருந்து 1970 இல் 264 இலட்சம் புசல்களாக உயர்வுற்றது.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன், சென்ற ஆண்டின் ரூ. 699 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில், 1970இல் ரூ. 432 இலட்சத்தால் அதிகரித்தது. 1970இல் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு, கடன்களிலும் மேலதிகப் பற்றுக்களிலும் ஏற்பட்ட ரூ. 498 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், வங்கிகள் வசமுள்ள இறக்குமதி உண்டியல் உடைமைகளின் ரூ. 38 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும், கொள்வனவு செய்யப்பட்ட பண விடயங்களின் ரூ. 29 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும் உள்ளடக்குகின்றது. கடன்களிலும், மேலதிகப் பற்றுக்களிலும் ஏற்பட்ட ரூ. 380 இலட்சம் கொண்ட பெருமளவு அதிகரிப்பு, நடுத்தர நீண்ட தவணைக் கடன்களால் ஏற்பட்டது.

மிக அண்மைக் காலத்தில் படிப்படியாக அதிகரித்துவந்த ஏனைய தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன், மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் ரூ. 420 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. இக்கொடுகடனின் வெளிநின்ற தொகை இவ்வாண்டின் முதல் இரு மாதங்களிலும் அதிகரித்து மாச்சிலும், ஏப்பிறலிலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றது; இதற்குப்பின் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

வங்கிக் கொடுகடனில் ஆகக்கூடிய வீழ்ச்சியைக் காட்டிய விடயம், 1969 திசெம்பர் இறுதியில் ரூ. 550 இலட்சத்திலிருந்து 1970 திசெம்பர் இறுதியில் ரூ. 278 இலட்சமாக வீழ்ச்சியுற்ற இறக்குமதி உண்டியல் உடைமைகளாகும். இவ்வீழ்ச்சி, தனியார் துறைக்கான (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும், கூட்டுறவுகளையும் தவிர்த்து) மொத்த வங்கிக் கொடுகடன் வீழ்ச்சியில் 60 சதவீதத்திற்கு மேலாக விளங்கியது. இத்துறைக்கான வங்கிக் கொடுகடன் வீழ்ச்சிக்கு முக்கியமாக 1970இல் விதிக்கப்பட்ட கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாயிருக்கலாம் மேலதிகப்பற்றுக்களும் ரூ. 135 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், கடன்கள் ரூ. 21 இலட்சத்தால் சிறிதளவிற்கு அதிகரித்தன.

கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 420 இலட்சம் கொண்ட சுருக்கத்திற்கு மேலாக, வர்த்தக வங்கிகள் வசமுள்ள தனியார் துறையின் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும், கூட்டுறவுகளையும் தவிர்த்து) தவணை சேமிப்பு வைப்புக்களிலும் ரூ. 1,887 இலட்சம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது. 1969இல் இவ்வதிகரிப்பு ரூ. 1,444 இலட்சமாக விளங்கியது.

தனியார் துறைக்கான (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுகளும் உட்பட) கொடுகடன் அதிகரிப்பினால் பண நிரம்பலின் மீது ஏற்பட்ட விரிவுத் தாக்கம், இத்துறையினால் வர்த்தக வங்கிகளில் திரட்டப்பட்டுள்ள தவணை சேமிப்பு வைப்புக்களினால் மேலதிகமாக ஈடுசெய்யப்பட்டது. இவ் வைப்புக்கள், 1969இல் ஏற்பட்ட ரூ. 1581 இலட்சத்துடன் ஒப்புநோக்குகையில், ரூ. 1788 இலட்சத்தால் அதிகரித்தன. 1970ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும்பாலான அதிகரிப்பிற்கு பண மதிப்பு நீக்கமே காரணமாயிருக்கலாம். இதன்கீழ் பொதுமக்கள் தம்வசமுள்ள சில நாணய உடைமைகளை வர்த்தக வங்கிகளிடம் வைப்புச்செய்யவேண்டிய பொறுப்பையுடையவர்களானார்கள். 1970 செத்தெம்பர் வரை, தனியார் துறையினது தவணை சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பு ரூ. 308 இலட்சமாக மட்டுமே விளங்கியது. வர்த்தக வங்கிகளின் 'ஏனைய பொறுப்புக்களிலும் கணக்குகளிலும் (தேறிய)' ஏற்பட்ட ரூ. 124 இலட்சம் கொண்ட வீழ்ச்சியின் விரிவுத் தாக்கத்தை நோக்குமிடத்து, 1970ஆம் ஆண்டில் தனியார் துறை இயக்கங்கள், பண நிரம்பலின்மீது ரூ. 189 இலட்சம் கொண்ட தேறிய சுருக்கத் தாக்கத்தை விளைவித்தன. ஆயினும், இவ்வாண்டின் முதல் பத்து மாதங்களிலும், தனியார் துறை இயக்கங்கள் ரூ. 376 இலட்சம் கொண்ட அளவிற்கு விரிவுடையதாயிருந்தன.

1970ஆம் ஆண்டின் வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பணக்குறையின் சுருக்கத் தாக்கம், மிக அண்மையாகவுள்ள சென்ற ஆண்டுகளுக்கு எதிராக மிகக் குறைவுற்றிருந்தது. 1969ஆம் ஆண்டின் ரூ. 7,969 இலட்சம்கொண்ட பணக்குறைவிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவு குறைவுற்றிருந்த ரூ. 4792 இலட்சம் கொண்ட நடைமுறைக் கணக்கின் மீதான சென்மதி நிலுவைக் குறை, ஏறக்குறைய முற்றிலும் அரசாங்கம் பெற்ற அந்நிய உதவி வருவாய்களினாலும் குறுந்—தவணைக் கொடுகடனின் தேறிய அதிகரிப்பினாலும் நிதி உதவி செய்யப்பட்டது. ஆகவே, பண நிரம்பலின் மீதான இப்பணக்குறையின் சுருக்கத் தாக்கம் ரூ. 15 இலட்சத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு சென்ற ஆண்டின் ரூ. 703 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு எதிராக 1970இல் ரூ. 288 இலட்சத்தால் உயர்வுற்றது. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களும், 1969ஆம் ஆண்டின் ரூ. 189 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக, ரூ. 121 இலட்சத்தால் உயர்வுற்றன. வங்கித் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 424 இலட்சத்தால் உயர்வுற்றன. இவை, முற்றிலும் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து மத்திய வங்கி பட்ட கடன்பாடுகளின் அதிகரிப்பினாலேயே ஏற்பட்டன. இத்தகைய கடன்பாடுகளின் ரூ. 1,556 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, பன்னாட்டு நிறுவனங்களுக்கான மத்திய வங்கிப் பொறுப்புக்களின் ரூ, 1,061 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினால் குறிப்பிடத்தக்களவு ஈடுசெய்யப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகள் ரூ. 566 இலட்சமாகவிருக்கையில், மீளக்கொடுப்பனவுகள் ரூ. 1,607 இலட்சமாக விளங்கின. பன்னாட்டு நாணய நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகள் மீதான சேவைக் கட்டணங்கள் ரூ. 193 இலட்சமாகும். மத்திய வங்கி வைத்திருக்கும் கொடுப்பனவு உடன்படிக்கைக் கணக்குகளின்கீழ் அந்நிய நாடுகளுக்கான நிலுவைகள் போன்ற ஏனைய பொறுப்புக்கள் ரூ. 223 இலட்சத்தால் குறைக்கப்பட்டன.

ஆகவே, அரசாங்கத் துறை இயக்கங்களே பண நிரம்பலின் மீதான ரூ. 835 இலட்சம் கொண்ட தேறிய அதிகரிப்பிற்கு முழுக் காரணமாயமைந்தன. ஆண்டிறுதி எண்தொகைகளின் மாற்றத்தால் அளவிடப்பட்டபடியான பண நிரம்பலின் இவ்வதிகரிப்பானது, மொத்தத் தேசிய உற்பத்தியின் 4.5 சதவீத வளர்ச்சியுடன் நோக்குகையில், சென்ற ஆண்டிலும் பார்க்க 4.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. ஆனால், ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, இவ்வாண்டின்போதான நாணய விரிவின் வீதம், ஆண்டிறுதி எண்தொகைகளினால் அளவிடப்பட்டவாறான பண நிரம்பலின் மாற்றத்தினால் போதியளவிற்குப் பிரதிபலிக்கப்படவில்லை. இவ்வாண்டின் முதல் பத்து மாதங்களின் விரிவு வீதம் குறிப்பிடத்தக்கதாயிருந்தது.

**1. (இ) வங்கியல்லாத் தனியார்துறையின் திரவநிலை.**

*1968-70 காலப்பகுதிக்கான வங்கியல்லாத் தனியார் துறையின் பிரதான, இரண்டாம்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் பாகுபாட்டை அட்டவணை II (ஈ) 3 தருகின்றது.*

*பிரதான இருப்புச் சொத்துக்கள் 1969ஆம் ஆண்டிறுதி அளவிலும் பார்க்க ரூ. 835 இலட்சத்தால் அல்லது 4.5 சதவீதத்தால் உயர்வுற்றிருக்கையில், மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் ரூ. 4,518 இலட்சத்தால் அல்லது 10.0 சதவீதத்தால் உயர்வுற்றன. இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட ரூ. 3,683 இலட்சம் அல்லது 14.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினுல் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்படுவதற்கு இயலுமாயிருந்தது. இவ்வதிகரிப்பு, பிரதானமாக வர்த்தக வங்கிகளிலும், அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியிலும் உள்ள சேமிப்பு வைப்புக்களால் ஏற்பட்டது; அரசாங்க முறிகளும், வரி ஒதுக்குச் சான்றிதழ்களும்கூட குறிப்பிடத்தக்களவு உயர்வுற்றன. இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்கள், ஓராண்டிற்கு முன் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்களில் 58.2 சதவீதமாக விளங்கியமைக்குமாருக, 1970ஆம் ஆண்டிறுதியில் 60.3 சதவீதமாக விளங்கின. இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் இவ்வதிகரிப்பிற்குப் பண மதிப்பு நீக்கமே ஏறக்குறைய முற்றிலும் காரணமாயிருக்கலாம். 1970, செத்தெம்பர் இறுதியில் இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்கள், மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்களில் 57.1 சதவீதமாக விளங்கின.*

*பிரதான திரவ இருப்புச் சொத்துக்களினது மாற்றத்தின் மிகக் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், பொதுமக்களின் கேள்வி வைப்புக்களிலுள்ள குறிப்பிடத்தக்களவு அதிகரித்த பங்கேயாகும். இது, ஏறக்குறையச் சென்ற பத்து ஆண்டுகளிலும் அவதானித்தவாறு, கேள்வி வைப்புக்களிலும் பார்க்கப் பொதுமக்கள் நாணயத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த விருப்புரிமையைக் காட்டியமைக்கு முழு மாருக அமைந்துள்ளது. கேள்வி வைப்புக்கள், 1969 இறுதியில் மொத்தப் பிரதான திரவ இருப்புச் சொத்துக்களில் (பண நிரம்பல்) 42.4 சதவீதமாக விளங்கியமைக்கு மாருக, 1970 இறுதியில் 52.5 சதவீதமாக விளங்கின. இதற்கும் பண மதிப்பு நீக்கமே முழுக் காரணமாகும்; 1970 செத்தெம்பர் இறுதியில் கேள்வி வைப்புக்கள், பண நிரம்பலில் 43 3 சதவீதமாக விளங்கின.*

*சென்ற சில ஆண்டறிக்கைகளும், மொத்த நாணய வெளியீட்டில், உயர்ந்த இன நாணயத்தாள்களின் அதிகரித்த பங்கைப்பற்றிக் கவனத்திற்கெடுத்துள்ளன. பொதுமக்கள் வசமுள்ள நாணய உடைமைகளின் இப்போக்கும், 1970ஆம் ஆண்டு மே இறுதி வரை அவதானிக்கப்பட்டுள்ளது; ரூ. 100/-, ரூ. 50/- இன நாணயத் தாள் உடைமைகள் ஒருமித்து ரூ. 635 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், மொத்த நாணய வெளியீடு ரூ. 802 இலட்சத்தால் அதிகரித்தது. வரியிலிருந்து தப்புவதற்கும், உயர்ந்தஇன நாணயத் தாள்களைப் பதுக்குவதற்கும் எதிராக அரசாங்க நடவடிக்கைகளை (பண மதிப்பு நீக்கம்) எதிர்பார்த்துப்போலும், மே உக்கும் யூலை உக்கும் இடையில் இந்நாணயத் தாள் உடைமைகளில் ஓரளவு நிலையான வீழ்ச்சி ஏற்பட்டது. மொத்த நாணய வெளியீட்டில், ரூ. 100/-, ரூ. 50/- இனத் தாள்களின் பங்கு, மே இறுதியில் 63.6 சதவீதத்திலிருந்து யூலை இறுதியில் 58.7 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. இதன்பின் இந்நாணயத் தாள்களின் அளவு படிப்படியாக அதிகரித்து, நவெம்பர் இறுதியில் பண மதிப்பு நீக்கத்துடன் தீவிரமாகக் குறைக்கப்பட்டது.*

## அட்டவணை II (ஈ) 3

## வங்கிகளல்லாத தனியார் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள்

| விபரம் | (தொகை) பத்து இலட்சம் ரூபாய்களில் | | | மொ. தே. உ. இன் சதவீதம் (அ) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1968 | 1969 | 1970 | 1968 | 1969 | 1970 |
| 1. முதன்மைத் திரவ இருப்புச்சொத்துக்கள் | | | | | | |
| (அ) நாணயங்களும், குத்திகளும் | 1,066.2 | 1,083.9 | 935.1 | 10.9 | 10.1 | 8.1 |
| (ஆ) கேள்வி வைப்புக்கள் | 847.0 | 799.2 | 1,031.5 | 8.6 | 7.4 | 8.8 |
| மொத்தம் | 1,913.2 | 1,883.1 | 1,966.6 | 19.5 | 17.5 | 16.9 |
| சதவீத மாற்றம் | + 5.8 | − 1.6 | + 4.5 | | | |
| 2. இரண்டாந்தரத்திரவஇருப்புச்சொத்துக்கள் | | | | | | |
| (அ) வர்த்தக வங்கிகளிலுள்ள சேமிப்பு வைப்புக்கள் | 319.6 | 375.1 | 534.3 | 3.3 | 3.5 | 4.6 |
| (ஆ) அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியிலுள்ள சேமிப்பு வைப்புக்கள் | 473.3 | 490.5 | 574.2† | 4.8 | 4.6 | 4.9 |
| (இ) இலங்கைச் சேமிப்பு வங்கியிலுள்ள சேமிப்பு வைப்புக்கள் | 100.3 | 102.3 | 108.9* | 1.0 | 0.9 | 0.9 |
| (ஈ) வர்த்தக வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்கள் | 491.7 | 594.3 | 613.8 | 5.0 | 5.5 | 5.3 |
| (உ) குடியிருப்போரின்அந்நியநிலுவைகள் | 0.9 | — | — | ... | — | — |
| (ஊ) சேமிப்புச் சான்றிதழ்கள் | 91.3 | 86.3 | 73.8* | 0.9 | 0.8 | 0.6 |
| (எ) இறைவரி உண்டியல்கள் | 11.5 | 15.4 | 12.7 | 0.1 | 0.1 | 0.1 |
| (ஏ) வரி ஒதுக்கு நிதிச் சான்றிதழ்கள் | 23.9 | 15.8 | 43.5 | 0.2 | 0.1 | 0.4 |
| (ஐ) அரசாங்க முறிகள் | 874.3 | 937.4 | 1,024.2 | 8.9 | 8.7 | 8.8 |
| மொத்தம் | 2,386.8 | 2,617.1 | 2,985.4* | 24.3 | 24.3 | 25.7 |
| சதவீத மாற்றம் | + 12.4 | + 9.6 | + 14.1 | | | |
| 3. தனியார்துறையின் மொத்தத்திரவ இருப்புச் சொத்துக்கள் | 4,300.0 | 4,500.2 | 4,952.0* | 43.8 | 41.9 | 42.7 |
| சதவீத மாற்றம் | + 9.4 | + 4.7 | + 10.0 | | | |
| அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, ஊழியர் சேம நிதி போன்ற நிதித்தாபனங்கள் வசமுள்ள தொகையைக்கொண்ட அரசாங்க முறிகள், இறைசேரி உண்டியல்கள் ஆகிய உடைமைகள் மேலே சேர்க்கப்படவில்லை. | 1,859.1 | 2,026.5 | 2,168.9 | 18.9 | 18.8 | 18.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) நடைமுறைச் சினைக்கொள் விலைகளின்படி.

* தற்காலிகமானவை.

** நவெம்பர் மாதத்திற்குரிய தற்காலிக எண் தொகைகள்.

## அட்டவணை II (ஈ) 4

### பண நிரம்பலின் கூறுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் | பொதுமக்களிடமுள்ள நாணயம் | | பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | | மொத்தப் பண நிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்த பண நிரம்பலின் சதவீதமாக | தொகை | மொத்த பண நிரம்பலின் சதவீதமாக | |
| 1957 ... ... | 434.9 | 41.8 | 605.2 | 58.2 | 1,040.1 |
| 1958 ... ... | 529.8 | 49.2 | 546.9 | 50.8 | 1,076.8 |
| 1959 ... ... | 565.0 | 48.0 | 612.7 | 52.0 | 1,177.7 |
| 1960 ... ... | 595.3 | 49.2 | 613.6 | 50.8 | 1,208.9 |
| 1961 ... ... | 692.2 | 53.8 | 596.4 | 46.2 | 1,288.6 |
| 1962 ... ... | 712.6 | 53.1 | 630.0 | 46.9 | 1,342.7 |
| 1963 ... ... | 828.4 | 55.0 | 677.7 | 45.0 | 1,506 0 |
| 1964 ... ... | 853.0 | 52.6 | 768.8 | 47.4 | 1,621.8 |
| 1965 ... ... | 901.4 | 52.5 | 814.3 | 47.5 | 1,715.7 |
| 1966 ... ... | 882.5 | 53.2 | 776.4 | 46.8 | 1,658.9 |
| 1967 ... ... | 979.9 | 54.2 | 827.7 | 45.8 | 1,807.6 |
| 1968 ... ... | 1,066.2 | 55.7 | 847.0 | 44.3 | 1,913.2 |
| 1969 ... ... | 1,083.9 | 57.6 | 799.2 | 42.4 | 1,883.1 |
| 1970 ... ... | 935.1 | 47.5 | 1,031.5 | 52.4 | 1,966.6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (ஈ) 5

### நாணய அமைப்பு — 100, 50, 10, 5 ரூபாய்களைக்கொண்ட இனங்களின்படி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் | ரூ. 100 | ரூ. 50 | ரூ. 10 | ரூ. 5 | நாணய வெளியீடு* |
|---|---|---|---|---|---|
| 1956 ... ... | 114.9 | 97.7 | 148.0 | 30.0 | 443.4 |
| 1957 ... ... | 116.5 | 116.7 | 155.8 | 29.9 | 475.1 |
| 1958 ... ... | 157.5 | 143.6 | 184.0 | 33.7 | 578.3 |
| 1959 ... ... | 174.5 | 152.1 | 193.5 | 36.2 | 621.3 |
| 1960 ... ... | 148.4 | 148.4 | 237.6 | 40.1 | 644.6 |
| 1961 ... ... | 211.9 | 180.3 | 254.6 | 42.1 | 763.8 |
| 1962 ... ... | 238.2 | 186.8 | 241.9 | 42.8 | 789.4 |
| 1963 ... ... | 275.3 | 236.7 | 257.6 | 46.5 | 900.9 |
| 1964 ... ... | 168.4 | 258.3 | 359.5 | 55.5 | 932.1 |
| 1965 ... ... | 239.9 | 297.8 | 319.7 | 50.5 | 1,002.8 |
| 1966 ... ... | 272.0 | 292.9 | 288.2 | 48.6 | 993.7 |
| 1967 ... ... | 316.2 | 313.1 | 296.3 | 51.3 | 1,072.8 |
| 1968 ... ... | 393.7 | 330.6 | 299.5 | 55.3 | 1,181.9 |
| 1969 ... ... | 435.7 | 322.9 | 293.7 | 54.1 | 1,212.7 |
| 1970 ... ... | 252.0 | 261.0 | 384.4 | 71.4 | 1,090.4 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* 2, 1 ரூபா இனத் தாள்களும், சகல நாணயக்குத்திகளும் அடங்கும்.

## அட்டவணை II (ச) 6

### வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார் துறையின் கேள்வி, தவணை, சேமிப்பு வைப்புக்களின் உடைமையாளர்கள் (காலமுடிவில் உள்ளபடி)

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % | தொகை | % | தொகை | % |
| **நிதி நிலையங்கள்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 41.9 | 5.5 | 122.5 | 22.2 | 14.1 | 3.8 | 178.5 | 10.6 |
| 1970 மாச்சு | 42.4 | 5.6 | 127.0 | 23.4 | 14.5 | 3.7 | 184.0 | 10.9 |
| 1970 யூன் | 48.6 | 5.9 | 125.1 | 24.9 | 14.7 | 3.5 | 188.3 | 10.8 |
| 1970 செத்தெம்பர் | 54.3 | 6.3 | 121.5 | 23.6 | 14.1 | 3.2 | 189.9 | 10.4 |
| 1970 திசெம்பர் | 56.1 | 5.7 | 135.3 | 24.0 | 16.3 | 3.0 | 207.7 | 10.0 |
| **பெருந்தோட்டங்கள்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 63.5 | 8.3 | 53.8 | 9.7 | 0.3 | 0.1 | 117.6 | 7.0 |
| 1970 மாச்சு | 70.9 | 9.3 | 52.9 | 9.7 | 0.3 | 0.1 | 124.1 | 7.3 |
| 1970 யூன் | 59.7 | 7.3 | 36.5 | 7.3 | 0.3 | 0.1 | 96.6 | 5.6 |
| 1970 செத்தெம்பர் | 61.9 | 7.2 | 38.3 | 7.4 | 0.4 | 0.1 | 100.6 | 5.5 |
| 1970 திசெம்பர் | 56.8 | 5.8 | 42.1 | 7.5 | 0.3 | 0.1 | 99.2 | 4.8 |
| **வர்த்தகம்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 108.5 | 14.2 | 126.0 | 22.8 | 5.0 | 1.3 | 239.5 | 14.2 |
| 1970 மாச்சு | 119.7 | 15.8 | 93.9 | 17.3 | 5.0 | 1.3 | 218.6 | 12.9 |
| 1970 யூன் | 138.4 | 16.9 | 85.5 | 17.0 | 5.1 | 1.2 | 229.1 | 13.2 |
| 1970 செத்தெம்பர் | 158.2 | 18.3 | 85.3 | 16.6 | 5.4 | 1.2 | 248.9 | 13.7 |
| 1970 திசெம்பர் | 185.1 | 18.8 | 94.6 | 16.8 | 6.4 | 1.2 | 286.1 | 13.7 |
| **தயாரிப்புத் தாபனங்கள்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 72.3 | 9.5 | 38.0 | 6.9 | 0.2 | 0.1 | 110.6 | 6.6 |
| 1970 மாச்சு | 62.0 | 8.2 | 39.8 | 7.3 | 0.3 | 0.1 | 102.1 | 6.0 |
| 1970 யூன் | 63.6 | 7.8 | 42.1 | 8.4 | 0.2 | — | 105.9 | 6.1 |
| 1970 செத்தெம்பர் | 85.4 | 9.9 | 42.6 | 8.3 | 0.3 | 0.1 | 128.3 | 7.1 |
| 1970 திசெம்பர் | 98.9 | 10.0 | 41.7 | 7.4 | 0.4 | 0.1 | 141.0 | 6.8 |
| **ஏனைய வியாபாரம்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 81.5 | 10.7 | 41.9 | 7.6 | 2.6 | 0.7 | 125.9 | 7.5 |
| 1970 மாச்சு | 88.1 | 11.6 | 48.9 | 9.0 | 3.7 | 0.9 | 140.7 | 8.3 |
| 1970 யூன் | 93.6 | 11.5 | 38.0 | 7.6 | 4.9 | 1.2 | 136.6 | 7.9 |
| 1970 செத்தெம்பர் | 89.8 | 10.4 | 37.6 | 7.3 | 5.7 | 1.3 | 133.1 | 7.3 |
| 1970 திசெம்பர் | 107.0 | 10.9 | 50.7 | 9.0 | 8.2 | 1.5 | 165.9 | 8.0 |
| **உள்ளூர் ஆட்சிச் சபைகள்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 15.8 | 2.1 | 13.3 | 2.4 | 0.2 | 0.1 | 29.2 | 1.7 |
| 1970 மாச்சு | 12.7 | 1.7 | 12.5 | 2.3 | 0.2 | 0.1 | 25.4 | 1.5 |
| 1970 யூன் | 11.2 | 1.4 | 11.7 | 2.3 | 0.2 | ... | 23.2 | 1.3 |
| 1970 செத்தெம்பர் | 14.3 | 1.6 | 12.0 | 2.3 | 0.2 | ... | 26.5 | 1.5 |
| 1970 திசெம்பர் | 16.9 | 1.7 | 12.2 | 2.2 | 0.2 | ... | 29.3 | 1.4 |
| **வியாபாரத் தொடர்பற்ற நிலையங்கள்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 50.3 | 6.6 | 35.9 | 6.5 | 6.3 | 1.7 | 92.6 | 5.5 |
| 1970 மாச்சு | 50.8 | 6.7 | 41.4 | 7.6 | 5.9 | 1.5 | 98.1 | 5.8 |
| 1970 யூன் | 52.9 | 6.5 | 43.9 | 8.7 | 6.3 | 1.5 | 103.0 | 5.9 |
| 1970 செத்தெம்பர் | 54.5 | 6.3 | 48.4 | 9.4 | 6.3 | 1.4 | 109.2 | 6.0 |
| 1970 திசெம்பர் | 59.7 | 6.1 | 54.2 | 9.6 | 7.8 | 1.5 | 121.7 | 5.8 |
| **தனியாட்கள்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 328.9 | 43.1 | 121.2 | 21.9 | 342.7 | 92.2 | 792.8 | 47.0 |
| 1970 மாச்சு | 311.9 | 41.1 | 126.1 | 23.2 | 357.7 | 92.3 | 795.8 | 47.1 |
| 1970 யூன் | 348.2 | 42.7 | 119.0 | 23.7 | 386.6 | 92.4 | 853.8 | 49.2 |
| 1970 செத்தெம்பர் | 345.4 | 40.0 | 129.3 | 25.1 | 408.7 | 92.7 | 883.4 | 48.5 |
| 1970 திசெம்பர் | 403.6 | 41.0 | 132.4 | 23.5 | 496.0 | 92.6 | 1032.0 | 49.5 |
| **மொத்தம்:** | | | | | | | | |
| 1969 திசெம்பர் | 762.7 | 100.0 | 552.6 | 100.0 | 371.5 | 100.0 | 1686.8 | 100.0 |
| 1970 மாச்சு | 758.6 | 100.0 | 542.5 | 100.0 | 387.7 | 100.0 | 1688.8 | 100.0 |
| 1970 யூன் | 816.3 | 100.0 | 501.9 | 100.0 | 418.4 | 100.0 | 1736.6 | 100.0 |
| 1970 செத்தெம்பர் | 863.9 | 100.0 | 515.0 | 100.0 | 441.1 | 100.0 | 1820.0 | 100.0 |
| 1970 திசெம்பர் | 984.1 | 100.0 | 563.1 | 100.0 | 535.6 | 100.0 | 2082.8 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பண நிரம்பலில் நாணயத்தின் பங்கினதும், நாணய வெளியீட்டில் உயர்ந்த இனத் தாள்களின் பங்கினதும் கடுமையான குறைப்பு வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாயிருப்பினும், இவை, நாட்டின் நாணய அமைப்பில் நிரந்தர அம்சங்களாக அமையக்கூடுமோவென்பதை இப்பொழுதே கூறிவிட முடியாது.

அட்டவணை II (ஈ) 6 வங்கிகளிலிருக்கும் தனியார் துறை வைப்புக்களைப் பரந்த உடைமைப் பகுப்புக்களின்படி பிரித்துக்காட்டுகின்றது.

வர்த்தக நிலையங்களின் கேள்வி வைப்புக்கள் 1969இன் ரூ. 286 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 766 இலட்சத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. மொத்தக் கேள்வி வைப்புக்களில் வர்த்தக நிலையங்களினது கேள்வி வைப்புக்களின் பங்கு, 1969 திசெம்பரில் முடிவடைந்த மூன்று ஆண்டுகளிலும் 8.8 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியுற்று, 1970 திசெம்பர் இறுதியில் 4.6 சதவீதப் புள்ளிகளால் 18.8 சதவீதமாக உயர்வுற்றது மொத்தக் கேள்வி வைப்புக்களில் தனியாட்களினது கேள்வி வைப்புக்களின் பங்கு, 1969 திசெம்பர் இறுதியில் 43.1 சதவீதத்திலிருந்து 1970 திசெம்பர் இறுதியில் 41.0 சதவீதமாக வீழ்ச்சியுற்றபோதும், இவ்வைப்புக்களும், வர்த்தக நிலையங்களின் கேள்வி வைப்புக்கள் போன்று ரூ. 747 இலட்சத்தால் உயர்வுற்றன. 'ஏனைய வியாபார' நிலையங்களின் கேள்வி வைப்புக்கள் ரூ. 255 இலட்சத்தாலும். தயாரிப்பு நிறுவனங்களின் வைப்புக்கள் ரூ. 266 இலட்சத்தாலும், நிதி நிலையங்களின் வைப்புக்கள் ரூ. 142 இலட்சத்தாலும் உயர்வுற்றன. பெருந்தோட்டங்களின் கேள்வி வைப்புக்கள் ரூ. 67 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், ஏனைய பகுப்புக்களின் கேள்வி வைப்புக்கள் சாதாரணமாக உயர்வுற்றன.

வர்த்தக வங்கிகளிலுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள், 1970ஆம் ஆண்டில் பொதுமக்களினது இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பில் ஏறக்குறைய 50 சதவீதமாக விளங்கின. 1969ஆம் ஆண்டில் ரூ. 1026 இலட்சத்தால் அதிகரித்த தவணை வைப்புக்கள், 1970ஆம் ஆண்டில் ரூ. 195 இலட்சம் கொண்ட சாதாரண அதிகரிப்பை மட்டுமே காட்டின. மறுபுறம், சேமிப்பு வைப்புக்கள் சென்ற ஆண்டில் ரூ. 555 இலட்சத்தால் அதிகரித்தமைக்கு மாறாக, 1970இல் ரூ. 1,592 இலட்சத்தால் அதிகரித்தன. 1970ஆம் ஆண்டில் தவணை வைப்புக்களின் மெதுவான வளர்ச்சிக்கு வங்கியல்லாத் தனியார் துறையினது அரசாங்க உரிமை உடைமைகளின் அதிகரிப்பு, தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்களில் பொதுமக்களினது வைப்புக்களின் அதிகரிப்பு போன்ற காரணிகள் காரணமாயிருக்கலாம். 1970ஆம் ஆண்டில் தவணை வைப்புக்களின் வளர்ச்சி மெதுவாகவிருப்பினும், இவ்வைப்புக்களின் உறுதிநிலை பாதுகாக்கப்பட்டது. தவணை வைப்புக்களின் பயன்பாட்டு வீதம், 1969இன் மாதாந்தச் சராசரியாகிய 0.19இலிருந்து 1970இல் 0.18 ஆக வீழ்ச்சியுற்றது. சேமிப்பு வைப்புக்களின் பயன்பாட்டு வீதம் 0.09 இல் எதுவித மாற்றமுமின்றியிருந்தது. வர்த்தக வங்கிளிடமுள்ள சேமிப்பு வைப்புக்களின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பிற்குப் பண மதிப்பு நீக்கமே பெருமளவு காரணமாயிருக்கலாம்.

வர்த்தக வங்களிடமுள்ள தவணை வைப்புக்களின் அதிகரிப்பு, பிரதானமாக நிதி நிலையங்களினதும் (பிரதானமாக சேம நிதிகள்), வியாபாரத் தொடர்பற்ற நிலையங்களினதும் வைப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. தனியாட்களின் தவணை வைப்புக்கள் உயர்வுற்றிருக்கையில், ஏனைய பகுப்புக்களின் வைப்புக்கள் வீழ்ச்சியுற்றன அல்லது மிகச் சிறு அதிகரிப்புக்களை மட்டும் காட்டின. வர்த்தக நிலையங்களின் தவணை வைப்புக்களில் மிகக் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டது. சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பு முற்றிலும் தனியாட்களின் உடைமைகளில் ஏற்பட்டது.

அரசாங்க நிறுவனங்களில், பொதுமக்கள் வைத்திருக்கும் சேமிப்புக்களில், அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியிடமுள்ள வைப்புக்கள் ஏறக்குறைய முற்றிலும் நாணய மதிப்பு நீக்கத்தால் ரூ. 837 இலட்சத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. இலங்கைச் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ரூ. 66 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், சேமிப்புச் சான்றிதழ்கள் ரூ. 125 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. சேமிப்புச் சான்றிதழ்களின் வீழ்ச்சிக்கு அவற்றின்மீது கொடுக்கப்படும் வட்டி வீதம் சில ஆண்டுகளாக எதுவித மாற்றமுமின்றியிருந்தமை காரணமாயிருக்கலாம். அதேசமயம் வர்த்தக வங்கிகள், இலங்கைச் சேமிப்பு வங்கி, அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி ஆகியவற்றிலுள்ள சேமிப்பு வைப்புக்களின் மீது கொடுக்கப்படும் வீதங்கள் சென்ற சில ஆண்டுகளாக காலத்திற்குக் காலம் உயர்த்தப்பட்டன.

பண மதிப்பு நீக்கத்தினுலேயே அரசாங்க நிறுவனங்களிலுள்ள வைப்புக்களின் மொத்த அதிகரிப்பு குறிப்பிடத்தக்கதாயிருக்கின்றது. இதற்கு, தனியார் துறையில் வைப்புக்களை ஏற்கும் நிதி நிலையங்களிடமிருந்தும், வர்த்தக வங்கிகளிடமிருந்தும் இவைகளுக்குள்ள கடும் போட்டியே காரணமாயிருக்கலாம்.

1970ஆம் ஆண்டில், தனியார் துறையினுல் அரசாங்க உரிமை உடைமைகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டது. இறைசேரி உண்டியல்களினதும், வரி ஒதுக்குச் சான்றிதழ்களினதும், அரசாங்க முறிகளினதும் மொத்த உடைமைகள் ரூ. 1,118 இலட்சத்தால் உயர்வுற்றன. ஒப்பு நோக்குகையில் 1969ஆம் ஆண்டில் இவை, ரூ. 607 இலட்சமாக விளங்கின. இறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 27 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அரசாங்க முறி உடைமைகள் ரூ. 459 இலட்சத்தால் அதிகரித்து. தனியார் துறை உடைமைகளின் அதிகரிப்பில், அரைப் பங்கிலும் கூடுதலாக விளங்கின. நம்பிக்கை, உபகார, இளைப்பாறற் சேம நிதிகள் (ஊழியர் சேமநிதியைத் தவிர்த்து) தமது அரசாங்க முறி உடைமைகளை, 1969இல் ரூ. 364 இலட்சத்தால் அதிகரித்தமையை நோக்குமிடத்து, ரூ. 382 இலட்சத்தால் அதிகரித்தன. ஏனையவற்றின் உடைமைகள் ரூ. 21 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

சுருங்கக்கூறின், 1970ஆம் ஆண்டில் பொதுமக்களின் இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டது. அரசாங்க உரிமைகளால் ஏற்பட்ட இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களினது அதிகரிப்பின் பங்கு, சென்ற ஆண்டுகளிலும் பார்க்க அதிகமாகவிருந்தது. இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் மொத்த அதிகரிப்பில் வங்கியல்லாத் தனியார் துறையின் அரசாங்க உரிமை உடைமைகளின் அதிகரிப்பு, சென்ற ஆண்டு 25.6 சதவீதமாக விளங்கியமைக்கு எதிராக, 1970இல் 30.2 சதவீதமாக விளங்கியது. ஆயினும், அரசாங்க முறிகள் போன்ற அரசாங்க உரிமை உடைமைகள் ஏறக்குறைய முற்றிலும், தொடர்ந்தும் நிறுவனச் சார்பில் முதலீடு செய்வோர் வசமேயிருந்தன. பொதுமக்களின் சகல நிதி இருப்புச் சொத்துக்களையும் நோக்குமிடத்து, அவ்விருப்புச் சொத்துக்களின் மொத்தத் தேசிய உற்பத்திக்கான வீதம், 1969இல் 41.9 சதவீதமாக விளங்கியமைக்கு எதிராக 1970இல் 42.7 சதவீதமாக விளங்கியது.

## 1. (ஈ) வட்டி வீதங்கள்

1970 சனவரி 11இல் வங்கி வீதம் $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து $6\frac{1}{2}$ சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. வர்த்தகம், அபிவிருத்தி ஆகியவற்றின் கடன்கள் தொடர்பாக யூசன்ஸ் வாக்குறுதிப் பத்திரங்களை வைத்துப் பெறப்பட்ட முற்பணங்கள் மீதான மத்திய வங்கி வட்டி வீதமும் $6\frac{1}{2}$ சதவீதத்திற்கு உயர்வுற்றது. 1970இல், நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியின் கீழான

மீள-நிதியிடல் வசதிகளைக் கையாளும் கொடுகடன் நிலையங்களுக்கு, மத்திய வங்கியின் வட்டி வீதங்களும் உயர்த்தப்பட்டன; விவசாயத்தினதும், கைத்தொழிலினதும் ஊக்குவித்தலுக்கு அல்லது அபிவிருத்திக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் மீதான வீதம் 5½ சதவீதத்திலிருந்து 6½ சதவீதத்திற்கும் வர்த்தகத்தினதும், வாணிபம் அல்லது வியாபாரத்தினதும் ஊக்குவித்தலுக்கு அல்லது அபிவிருத்திக்குக் கொடுக்கப்பட்ட கடன்களுக்குரிய வீதம் 6½ சதவீதத்திலிருந்து 7½ சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டன. தேயிலைத் தொழிற்சாலைகளைப் புதுப்பித்தலுக்கு உம்/அல்லது புதிய தேயிலைத் தொழிற்சாலைகளை ஆக்குவதற்கு வழங்கப்பட்ட மீள-நிதியிடல் கடன்களின் மீதான வீதங்கள் உள்ளூர்ச் செலவு சம்பந்தமானவைக்கு 5 சதவீத வட்டியிலும், அந்நிய செலாவணிச் செலவுக்கு 7 சதவீத வட்டியிலும் எதுவித மாற்றமுமின்றியிருந்தன. விவசாயக் கொடுகடன் திட்டத்தின் கீழான மத்திய வங்கியின் மீள-நிதியிடல் வீதம் 1½ சதவீதத்தில் மாற்றமுறுதிருக்கையில், உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நெற் கொள்வனவின் நிதி உதவிக்காகக் கூட்டுறவுகளுக்குரிய முற்பணங்கள் தொடர்பாகவும், உள்ளூரில் விளையும் விவசாயப் பொருட்களின் கொள்வனவு, விற்பனவு அல்லது களஞ்சியத்திற்காகவும் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களின் மீதான வீதம், 1970இல் தொடர்ந்தும் 3 சதவீதமாகவிருந்தது.

வங்கி வீத அதிகரிப்புடன், வர்த்தக வங்கிகளின் சகல கடன்கொடுத்தல் வீதங்களும், 1970 சனவரியில் அதிகரித்தன. அரசாங்கப் பிணைகளை வைத்துப் பெறப்பட்ட முற்பணங்களின் மீதான ஆகக்குறைந்த, ஆகக்கூடிய வீதங்கள் முறையே 5¾ சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கும், 8½ சதவீதத்திலிருந்து 9½ சதவீதத்திற்கும் உயர்வுற்றன. கொள்வனவு செய்யப்பட்ட உண்டியல்களின் மீதான ஆகக்கூடிய வீதம் 9 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கும், ஆகக்குறைந்த வீதம் 5½ சதவீதத்திலிருந்து 6½ சதவீதத்திற்கும் அதிகரித்தன. வர்த்தகக் கையிருப்பை வைத்துப் பெறப்பட்ட கடன்களைப் பொறுத்தவரை, ஆகக்கூடிய வீதம் 11 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கும் ஆகக் குறைந்த வீதம் 7½ சதவீதத்திலிருந்து 8½ சதவீதத்திற்கும் உயர்வுற்றன. கூட்டுப் பங்குநிலையங்களின் பங்குகளையும், அசைவற்ற சொத்தையும் வைத்துப் பெறப்பட்ட கடன்களின்மீதான ஆகக்கூடிய, ஆகக்குறைந்த வீதங்கள் 1 சதவீதப் புள்ளியால் முறையே 10 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கும், 7 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கும் உயர்வுற்றன. ஏனைய வகைப் பிணைகளை வைத்துப் பெறப்பட்ட முற்பணங்களின் மீதான ஆகக்கூடிய வீதங்கள் 11 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கும், ஆகக்குறைந்த வீதம் 6 சதவீதத்திலிருந்து 6½ சதவீதத்திற்கும் அதிகரித்தன. பிணையற்ற கடன்களின் மீதான ஆகக்குறைந்த வீதம் 7½ சதவீதத்திலிருந்து 8½ சதவீதத்திற்கும், ஆகக்கூடிய வீதம் 11 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கும் உயர்வுற்றன.

1970 சனவரியில் சகல வர்த்தக வங்கிகளும் தமது வைப்பு வீதங்களை உயர்த்தின. சேமிப்பு வைப்புக்களின்மீது கொடுக்கப்படும் வட்டிவீதம் 3¾ சதவீதத்திலிருந்து 4½ சதவீதமாக உயர்வுற்றது. சகல காலப்பகுதிகளுக்குமான தவணை வைப்புக்களின்மீதான வீதங்கள் முக்கால் சதவீதத்தால் உயர்வுற்றன. இந்நோக்கத்திற்காக, வைப்புக்கள் மூன்று அளவு பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டன. அதாவது ரூ. 5,000 உக்குக் கீழ்ப்பட்டவை; ரூ. 5 000 உம் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் ரூ. 25,000 உக்கு உட்பட்டவை; ரூ. 25,000 உம் அதற்கு மேற்பட்டவையுமாகும். இவ்வைப்புப் பகுப்புக்களின் மீதான வீதங்கள் கால் சதவீத அளவில் வேறுபட்டன. ஆகவே, 36 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிகளுக்கு ரூ. 5,000 உக்குக் கீழுள்ள வைப்புக்களின் மீது கொடுக்கப்படும் வீதம் 5¼ சதவீதமாகவும், ரூ. 6,000 உம் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் ரூ. 25,000உக்கு உட்பட்டவையுமான வைப்புக்களின் மீதான வட்டி வீதம் 5½ சதவீதமாகவும், ரூ. 25,000 உம் அதற்கு மேற்பட்டவையுமான வைப்புக்களின்மீது வழங்கப்படும் வீதம் 5¾ சதவீதமுமாகவிருந்தன. கடைசியாகக் கூறப்பட்ட வீதமே, வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்களின்மீது பெறக்கூடிய ஆகக்கூடிய வீதமாகும்.

இவ்வாண்டின்போது நிலையான வைப்புக்களின் மீதான இலங்கைச் சேமிப்பு வங்கி வீதம் 3 தொடக்கம் 6 மாதங்கள் வரையான வைப்புக்களின்மீது 3 சதவீதமாகவும், 6 தொடக்கம் 9 மாதங்கள் வரையான வைப்புக்களின்மீது 3½ சதவீதமாகவும், 9 தொடக்கம் 11 மாதங்கள் வரையான வைப்புக்களின் மீது 4 சதவீதமாகவும், 12 மாதங்களுக்கான வைப்புக்களின்மீது 4½ சதவீதமாகவும் எதுவித மாற்றமுமின்றியிருக்கையில், ஏற்கப்படும் ஆகக் குறைந்த நிலையான வைப்பும் ரூ. 25,000இல் மாற்றமுறாதிருந்தது. சேமிப்பு வைப்புக்களின்மீது கொடுக்கப்படும் வீதம் 3½ சதவீதத்திலிருந்து 1970 சனவரியில் 4 சதவீதமாக உயர்வுற்றது. அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியிலுள்ள சேமிப்பு வைப்புக்களின்மீதான வீதம் 3.0 சதவீதத்திலிருந்து சனவரியில் 3.6 சதவீதமாக உயர்வுற்றது.

நீண்ட தவணைக் கடன்கொடு நிலையங்களின் கடன்கொடுத்தல் வீதங்களும், 1970இல் மாற்றியமைக்கப்பட்டன. கமத்தொழிற் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம் அசைவற்ற சொத்தைப் பிணையாக வைத்து அபிவிருத்தித் தேவைகளுக்காக வழங்கப்பட்ட கடன்களின் மீதான வீதத்தை 1970 பெப்புருவரியில் 7½ சதவீதத்திலிருந்து 8½ சதவீதத்திற்கும் அதன்பின் 1970 ஒற்ரோபரில் 9 சதவீதமாகவும் உயர்த்தியது. 1970 பெப்புருவரி தொடக்கம், கமத்தொழிற் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம் அசைவுச் சொத்தைப் பிணையாக வைத்து அபிவிருத்தித் தேவைகளுக்காக வழங்கப்படும் கடன்களின்மீது 10 சதவீதத்தை அறவிட்டுள்ளது. அசைவற்ற சொத்தைப் பிணையாக வைத்துப் பெறப்பட்ட ஏனைய கடன்கள்மீதான வீதம் 8½ சதவீதத்திலிருந்து 1970 பெப்புருவரியில் 9½ சதவீதமாகவும், 1970 ஒற்ரோபரில் 10 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டது. அசைவுச் சொத்தைப் பிணையாக வைத்துப் பெறப்பட்ட இப்பகுப்பிலுள்ள ஏனைய கடன்கள் மீதான வீதம் 1970 பெப்புருவரியில் 12 சதவீதமாக நியமிக்கப்பட்டது. இலங்கைச் சேமிப்பு வங்கியின் கடன்கொடுத்தல் வீதம் கட்டடக் கடன்களைப் பொறுத்தவரை, 7 சதவீதத்திலிருந்து 1970 நவெம்பரில் 10 சதவீதமாகவும், ஏனைய கடன்களுக்கு 12 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டன. அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், மத்திய வங்கியினால் மீளநிதியிடப்படும் கடன்களின் மீதான கடன்கொடுத்தல் வீதத்தை 8½ சதவீதத்திலிருந்து சனவரி மாதத்தில் 9½ சதவீதமாக உயர்த்தியது. ஏனைய சகல கடன்களின் மீதான வீதத்தை அதே மாதத்தில் 9½ சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தியது. வெளிநாட்டு நாணயக் கடன்கள்மீதான வீதமும் 10 சதவீதத்திலிருந்து 10½ சதவீதமாக உயர்த்தப்பட்டது. 1969 மேயில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை மீளப் பயிரிடல் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு, தேசிய ஈட்டு வங்கியினால் அறவிடப்படும் வட்டி வீதங்கள், காணியை அடைமானமாக வைத்துப் பெறப்படும் கடன்களுக்கான வட்டிவீதம் 5 சதவீதத்திலும், ஏனைய பிணைகளை வைத்துப் பெறப்படும் கடன்களின் மீதான வீதம் 7 சதவீதத்திலும் எதுவித மாற்றமுமின்றியிருந்தன. இந்நிலையத்தினது ஏனைய சகல கடன்கள் மீதான வட்டி வீதங்களும் 1970 சனவரியில் அதிகரித்தன; ஆகக்கூடிய வீதம் 9½ சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்வுற்றது.

1969 திசெம்பரில் 4.10 சதவீதத்திலிருந்த இறைசேரி உண்டியல் வீதம், 1970 சனவரியில் 4.12 சதவீதமாகவும், பெப்புருவரியில் 4.64 சதவீதமாகவும், மாச்சில் மேலும் 4.76 சதவீதமாகவும் உயர்வுற்று, அதன்பின் இதே நிலையில் மாற்றமுறாதிருந்தது. அரசாங்கப் பிணைகளின் மீதான வட்டிவீதங்

கள் 1970இல் உயர்த்தப்பட்டன. 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முதிர்வு காலத்தையுடைய முதலீடுகளின்மீதான வீதம் 5½ சதவீதத்திலிருந்து சனவரியில் 6½ சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கையில், 12 தொடக்கம் 15 ஆண்டுகள் வரையிலான முறிகள் 1970 மாச்சு தொடக்கம் 6½ சதவீத வட்டியில் வழங்கப்பட்டன. 5 தொடக்கம் 7 ஆண்டுகள் வரையான முறிகளின்மீதான வீதம் 4½ சதவீதத்திலிருந்து நவெம்பரில் 9 சதவீதமாக உயர்வுற்றது.

**2. (அ) வர்த்தக வங்கித்தொழில் — பிரதான போக்குகள்**

1970ஆம் ஆண்டில் பண நிரம்பல் ரூ. 835 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், பொதுமக்கள் வசமுள்ள நாணயம் ரூ. 1,480 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று, வர்த்தக வங்கிகளிலுள்ள பொருள்வளங்களை அதிகரிக்கச்செய்தன. ஆயினும், பொதுமக்கள் வசமுள்ள நாணய உடைமைகளின் வீழ்ச்சி, நாணய மதிப்பு நீக்கத்தினல். இவ்வாண்டின் இறுதி மூன்று மாதங்களில் மட்டுமே நடைபெற்றது. இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் பண நிரம்பலின் ரூ. 1,829 இலட்சம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டிருக்கையில், நாணய உடைமைகளிலும் ரூ. 868 இலட்சம்கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது.

முதல் எட்டு மாதங்களிலும் வர்த்தக வங்கிப் பொருள்வளங்கள்மீது கேள்விகள் பிரதானமாக அரசாங்கத்திலிருந்தும், கூட்டுறவுகளிலிருந்தும் அதிகரித்தன. ஆகவே, வங்கிகள் கடன்களைப் பெறுவதற்கு அநேகமாக மத்திய வங்கியில் தங்கியிருக்கவேண்டியிருந்தது; முதல் எட்டு மாதங்களில் அத்தகைய கடன்பாடுகளினது வெளிநின்ற தொகையின் மாதாந்தச் சராசரி ரூ. 2,250 இலட்சமாக விளங்கியது. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டின் தொடர்பான காலப்பகுதிச் சராசரி ரூ. 1,241 இலட்சமாகும். பண மதிப்பு நீக்கத்தினலும், கூட்டுறவுகளுக்கு வழங்கப்பட்ட பொருள் வரவு முற்பணங்களின் குறிப்பிடத்தக்களவு பங்கை செத்தெம்பர் மாதம் அரசாங்கம் தீர்ப்பனவு செய்தமையாலும், வங்கிகளின் திரவ நிலை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையால், வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடம் பட்ட கடனைக் குறைக்க இயலுமாயிருந்தன. அத்தகைய கடன்பாடுகளின் வெளிநின்ற தொகை ஓகத்து இறுதியில் ரூ. 2,151 இலட்சமாகவிருந்து திசெம்பர் இறுதியில் ரூ. 1,488 இலட்சமாக வீழ்ச்சியுற்றது.

**2. (ஆ) கிளையமைப்பு**

1963 காலப்பகுதியில், இலங்கையர் வங்கிகளுக்கும், அந்நிய வங்கிகளுக்குமிடையில் உள்ள வங்கி அலுவலகங்களினதும், வைப்புக்களினதும் பகுப்பாய்வு அட்டவணை II (ஈ) 7இல் தரப்பட்டுள்ளது.

1970ஆம் ஆண்டில் வங்கிக் கிளை விரிவு சிறிது தளர்ச்சியுற்றது. வர்த்தக வங்கி அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை சென்ற ஆண்டதிகரிப்பாகிய 14 உடன் ஒப்பிடுகையில், 10ஆல் அதிகரித்து 1970 இறுதியில் 165 ஆக விளங்கியது. மக்கள் வங்கி 6 புதிய கிளைகளைத் திறந்தது. இப்புதிய அலுவலகங்கள் இரத்தினபுரி, கட்டுகஸ்தோட்டை, கந்தளாய், மொறட்டுவை, கிருள்ளை, பூகொடை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. இலங்கை வங்கியினல் பேருவலை, கடவத்தை, கொழும்பு ஆகிய இடங்களில் மூன்று புதிய கிளைகள் திறக்கப்பட்டன. கற்றன் வங்கியையும், நஷனல் அன்ட் கிறின்ட்லெயிஸ் வங்கியின் இரு கிளைகளையும் இணைத்துப் புதிதாக அமைக்கப்பட்ட கற்றன் நஷனல் வங்கியும், கொழும்பில் ஒரு கிளை அலுவலகத்தைத் திறந்தது.

## அட்டவணை II (ச) 7

### வங்கி அலுவலகங்களினதும், வைப்புக்களினதும் பங்கீடு *1963/70*

| ஆண்டு | மொத்தம் | | | இலங்கை வங்கிகள் | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய, பாகிஸ்தானிய வங்கிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | |
| | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % |
| 1963 | 83 | 1,301 | 100 | 67 | 801 | 61 | 12 | 412 | 32 | 4 | 88 | 7 |
| 1964 | 88 | 1,447 | 100 | 72 | 943 | 65 | 12 | 415 | 29 | 4 | 90 | 6 |
| 1965 | 97 | 1,546 | 100 | 81 | 1,023 | 66 | 12 | 431 | 28 | 4 | 92 | 6 |
| 1966 | 105 | 1,502 | 100 | 89 | 1,003 | 67 | 12 | 419 | 28 | 4 | 80 | 5 |
| 1967 | 133 | 1,637 | 100 | 117 | 1,157 | 71 | 12 | 404 | 25 | 4 | 76 | 5 |
| 1968 | 141 | 1,808 | 100 | 125 | 1,329 | 73 | 12 | 409 | 23 | 4 | 71 | 4 |
| 1969 | 155 | 1,917 | 100 | 140 | 1,405 | 73 | 11 | 437 | 23 | 4 | 74 | 4 |
| 1970 | 165 | 2,394 | 100 | 152 | 1,831 | 76 | 9 | 472 | 20 | 4 | 91 | 4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கவனிப்பு: 1969ஆம் 1970ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய வங்கிகளின் எண்ணிக்கைக் குறைவிற்குப் பின்வருவன காரணமாயிருக்கலாம்.

1. 1969ஆம் ஆண்டில் ஈஸ்ரேன் வங்கி லிமிடெட்டை இலங்கை வங்கியாக மாற்றியமை.
2. 1970இல் கற்றன் தேசிய வங்கியை அமைப்பதற்காக கற்றன் வங்கியையும் நெஷனல் அன்ட் கிறின்ட் லேய்ஸ் வங்கியின் இரு கிளைகளையும் மாற்றியமைத்தமை.

இலங்கையில் தொழிலாற்றும் சகல அந்நிய வங்கிகளிலும் (கபிப் வங்கியைத் தவிர்த்து) இப்பொழுது இலங்கையர் புதிதாகக் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பினும், மொத்த வைப்புக்களில், இலங்கை வங்கிகளின் பங்கு, *1969* இறுதியில் *73* சதவீதத்திலிருந்து *1970* இறுதியில் *76* சதவீதமாக அதிகரித்தது. இதே காலப்பகுதியில் பிருத்தானிய வங்கிகளின் பங்கு, *23* சதவீதத்திலிருந்து *20* சதவீதமாக வீழ்ச்சியுற்றது; இதற்கு நஷனல் அன்ட் கிறின்ட்லேய்ஸ் வங்கியின் இரு கிளைகளைக் கற்றன் வங்கியுடன் இணைத்து கற்றன் நஷனல் வங்கியாக அமைத்தமையே ஓரளவு காரணமாகும்.

சென்ற ஆண்டைப்போன்று, வர்த்தக வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்களின் அதிகரிப்பில் மிகக் கூடிய பங்கு, அந்நிய வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்களில் ஏற்பட்டதாகும். மறுபுறம், இலங்கை வங்கிகள், கேள்வி வைப்புக்களின் மொத்த அதிகரிப்பில் ஏறக்குறைய *90* சதவீதமாகவும், சேமிப்பு வைப்புக்களின் மொத்த அதிகரிப்பில் *90* சதவீதத்திற்கு மேலாகவும் விளங்கின.

சகல வங்கிகளுக்குமான கேள்வி வைப்புக்களின் சராசரி அளவு, *1969* இறுதியில் ரூ. *5,370* ஆக அமைந்து, *1970* இறுதியில் ரூ. *6,383* ஆக அதிகரித்தது. சேமிப்பு வைப்புக்களும் சராசரி அளவில் ரூ. *999* இலிருந்து ரூ. *1079* ஆக அதிகரித்திருக்கையில், தவணை வைப்புக்களின் சராசரி அளவு ரூ. *44,952* இலிருந்து ரூ. *39,147*ஆக வீழ்ச்சியுற்றது.

## அட்டவணை II (ஈ) 8

# வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதலியவற்றின் பங்கீடுகள்

(மாத எண்தொகைகளின் சராசரி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970* | காலமுடிவில் டிசெம். 1969 | டிசெம். 1970 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும் மத்தியவங்கியிலுள்ள வைப்புக்களும் (சட்டமுறையான ஒதுக்குப் பணமும் உட்பட) ... | 116 | 132 | 148 | 186 | 164 | 182 | 224 | 233 | 218 | 247 | 250 | 248 | 258 | 371 |
| வெளிநாட்டு நிலுவைகள் ... | 52 | 58 | 54 | 55 | 44 | 49 | 55 | 62 | 57 | 72 | 63 | 36 | 52 | 44 |
| இறைசேரி உண்டியல்கள் ... | 24 | 28 | 51 | 89 | 128 | 73 | 89 | 124 | 80 | 102 | 50 | 41 | 45 | 281 |
| கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ... | 119 | 115 | 122 | 136 | 114 | 126 | 173 | 175 | 198 | 252 | 241 | 275 | 297 | 144 |
| மொத்தத் திரவச்சொத்துக்கள் ... | 311 | 333 | 375 | 466 | 450 | 430 | 541 | 594 | 553 | 673 | 604 | 600 | 652 | 840 |
| மொத்த முதலீடுகள் ** ... | 285 | 284 | 290 | 303 | 313 | 330 | 329 | 330 | 300 | 278 | 275 | 263 | 263 | 362 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப்பற்றுக்களும் ... | 395 | 430 | 435 | 477 | 495 | 633 | 669 | 682 | 809 | 1000 | 1240 | 1391 | 1363 | 1403 |
| கேள்வி வைப்புக்கள் † ... | 655 | 657 | 677 | 829 | 789 | 853 | 917 | 949 | 914 | 955 | 945 | 958 | 928 | 1225 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் ... | 300 | 340 | 359 | 380 | 460 | 535 | 572 | 631 | 649 | 798 | 915 | 989 | 986 | 1169 |
| மொத்த வைப்புக்கள் ... | 955 | 998 | 1036 | 1209 | 1250 | 1389 | 1490 | 1580 | 1564 | 1755 | 1863 | 1948 | 1917 | 2394 |
| விகிதம் ... | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... | 17.7 | 20.1 | 21.9 | 22.4 | 20 8 | 21.3 | 24.4 | 24 5 | 23.8 | 25 9 | 26.4 | 25.9 | 27.8 | 30.3 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... | 12.1 | 13.2 | 14.3 | 15.4 | 13.1 | 13.1 | 15 0 | 14.7 | 13.9 | 14.1 | 13.4 | 12.7 | 13.5 | 15.5 |
| மொத்த வைப்புக்களுக்கு வெளிநாட்டு நிலுவைகளின் விகிதம் ... | 5.4 | 5.8 | 5.2 | 4.5 | 3.5 | 3.5 | 3.7 | 3.9 | 3.6 | 4.1 | 3.4 | 1.8 | 2.7 | 1.8 |
| மொத்த வைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல்களின விகிதம் ... | 2.5 | 2.8 | 4.9 | 7.4 | 10.2 | 5.3 | 6.0 | 7.8 | 5.1 | 5 8 | 2.7 | 2.1 | 2.3 | 11.7 |
| மொத்த வைப்புக்களுக்குக் கழிவு செய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் ... | 12.5 | 11.5 | 11.8 | 11.2 | 9.1 | 9.1 | 11.6 | 11.1 | 12.7 | 14.4 | 12.9 | 14.1 | 15.5 | 6.0 |
| கேள்வி வைப்புக்களுக்குத் திரவச்சொத்துக்களின் விகிதம் ... | 47.5 | 50.7 | 55.4 | 56.2 | 57.0 | 50.4 | 59 0 | 62.6 | 60 5 | 70.5 | 63.9 | 62.6 | 70.3 | 68.6 |
| மொத்த வைப்புசுளுக்குத் திரவச் சொத்துசுளின் விகிதம் ... | 32.6 | 33.4 | 36.2 | 38.5 | 36.0 | 31.0 | 36.3 | 37.6 | 35.4 | 38.3 | 32.4 | 30.8 | 34.0 | 35.1 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் ... | 29.8 | 28.5 | 28.0 | 25.1 | 25.0 | 23.8 | 22.1 | 20.9 | 19.2 | 15.8 | 14.8 | 13.5 | 13.7 | 15.1 |
| மொத்த வைப்புக்களுக்குக் கடன்கள், மேலதிகப்பற்றுக்களின் விகிதம் | 41.4 | 43.1 | 42.0 | 39.4 | 39.6 | 45.6 | 44.9 | 43.2 | 51.7 | 57.0 | 66.6 | 71.4 | 71.1 | 58.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* ரூ.100/–ரூ.50/– இனத்தாள்களைப் பணமதிப்பு நீக்கம்செய்ததன் விளைவால், 1970ஆம் ஆண்டின் இறுதி 3 மாதங்களிலும் வர்த்தகவங்கிகளின் இருப்புச்சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பில்ஏற்பட்ட வேறுபாட்டினால் இவ்வடைப்புக்கோட்டிலுள்ள சராசரிகள், சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான எண்தொகைகளில் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன.

** அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், தனியார் பிணைகளும், மத்திய வங்கி வெளியீடுகளும்.

† உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

## 2. (இ) வங்கி இருப்புச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பு

*1959 — 70 சம்பந்தமாக வர்த்தக வங்கிகளின் திரட்டப்பட்ட இருப்புச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களின் புள்ளிவிபரம் அட்டவணை I (ஈ) 8 இல் காட்டப்பட்டுள்ளது.*

வர்த்தக வங்கிகளின் மொத்த இருப்புச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் சென்ற ஆண்டின் ரூ. 2,218 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பு நோக்குகையில், 1970இல் ரூ. 5,577 இலட்சத்தால் அதிகரித்தன. பொறுப்புக்களின் அதிகரிப்பு பிரதானமாக வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூ. 4,769 இலட்சம் கொண்ட அதிகரிப்பை உள்ளடக்கியது; தனியார் துறை வைப்புக்கள் ரூ. 4 032 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், அரசாங்க வைப்புக்கள் ரூ. 737 இலட்சத்தால் அதிகரித்தன, வர்த்தக வங்கிகளின் மூல தனமும், ஒதுக்குகளும் அவற்றின் 'ஏனைய பொறுப்புக்களும்' முறையே ரூ. 178 இலட்சத்தாலும், ரூ. 579 இலட்சத்தாலும் அதிகரித்தன. மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ரூ. 43 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், வெளிநாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ரூ. 79 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பெரும்பாலும் பண மதிப்பு நீக்கத்தினுல் ஏற்பட்டதாகும். 1969 திசெம்பருக்கும் 1970 செத்தெம்பருக்குமிடையில் வைப்புப் பொறுப்புக்களின் அதிகரிப்பு, ரூ. 1,796 இலட்சமாக விளங்கியது. மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடுகளின் குறைந்தளவு அதிகரிப்பிற்கும், நாணய மதிப்பு நீக்கத்தினுல் வர்த்தக வங்கிகளுக்குக் கிடைக்கப்பெற்ற அதிகரித்த வைப்பு வளங்களே பிரதான காரணமாயிருக்கலாம். 1969 திசெம்பருக்கும் 1970 ஓகத்துக்குமிடையில் மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ரூ. 1,150 இலட்சத்தால் அதிகரித்தன. ஆயினும் உத்தரவாத விலேத் திட்டத்தின்கீழ் நெற் கொள்வனவுகளுக்கு வர்த்தக வங்கிகளினுல் வழங்கப்பட்ட கடன்களுக்காக, மத்திய வங்கியினுல் இவைகளுக்கு வழங்கப்பட்ட மீளநிதியிடற் கடன்களே வர்த்தக வங்கிகள் செத்தெம்பர் மாதத்தில் மீளக்கொடுப்பனவு செய்தமையால், அவற்றின் (மத்திய வங்கியிலிருந்து பெற்ற) வெளிநின்ற கடன்பாடுகள் ரூ. 2,091 இலட்சத்தால் கடுமையாகக் குறைவுற்றன. ஒற்ரூேபர் மாதத்தில் நாணய மதிப்பு நீக்கம் தொடர்பாக, புதிய ரூ. 100, ரூ. 50 தாள்களேப் பெருமளவிற்கு எடுப்பனவு செய்தமையினுல், மத்திய வங்கியிலிருந்து பெற்ற வங்கிக் கடன்பாடுகள் ரூ. 3,368 இலட்சம் கொண்ட அசாதாரண அதிகரிப்பைப் பதிவுசெய்தன. பண மதிப்பு நீக்கஞ்செய்யப்பட்ட நாணயத்தாள்களே மத்திய வங்கிக்குக் கையளித்ததும், வெளிநின்ற கடன்பாடுகளின் தொகை நவெம்பர் இறுதியில் ரூ. 2,781 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது.

இருப்புச் சொத்துக்களேப் பொறுத்தவரை வர்த்தக வங்கிகளின் கடன்களும் முற்பணங்களும், 1952ஆம் ஆண்டிற்குப் பின் முதல் தடவையாக ரூ. 1,120 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன; 1969இல் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 3,365 இலட்சமாக விளங்கியது. இவ்வீழ்ச்சிக்கு வங்கிகளிலுள்ள இறக்குமதி உண்டியல்களின் அளவில் ஏற்பட்ட ரூ, 1,728 இலட்சம் கொண்ட வீழ்ச்சியே பெருமளவு காரணமாகும். இறக்குமதி உண்டியல்களின் வீழ்ச்சிக்கு, சிலகாலமாக வர்த்தக வங்கிகளிலிருந்த அரசாங்க இறக்குமதி உண்டியல்களே எடுப்பனவுசெய்தமையே பிரதான காரணமாகும். வர்த்தக வங்கியின் அரசாங்க இறக்குமதி உண்டியல்கள் 1970இல் ரூ. 1,418 இலட்சத்தால் குறைக்கப்பட்டன. மேலதிகப் பற்றுக்களின் வெளிநின்ற தொகையும் ரூ. 369 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், கடன்களும், ஏற்றுமதி உண்டியல்களும் முறையே ரூ. 772 இலட்சத்தாலும், ரூ. 206 இலட்சத்தாலும் அதிகரித்தன.

ஆண்டு முழுவதையும் ஒருமித்து நோக்கின், வர்த்தக வங்கிகளின் பண நிலே குறிப்பிடத்தக்களவு திருத்தமுற்றது. 1969 திசெம்பர் இறுதிக்கும் 1970 திசெம்பர் இறுதிக்குமிடையில் மொத்தப் பண உடைமைகள் (சட்ட

முறையான ஒதுக்குகளும் உட்பட) ரூ. 1,125 இலட்சத்தால் அதிகரித்து, மொத்த வைப்புக்களில் சென்ற ஆண்டு 13.5 சதவீதமாக விளங்கியமைக்கு மாருக, 1970 திசெம்பர் இறுதியில் 15.5 சதவீதமாக விளங்கியது. பண உடைமைகளின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பிற்கு, நாணய மதிப்பு நீக்கத்தினுல் இவ்வாண்டின் இறுதி மூன்று மாதங்களிலும் பதிவுசெய்யப்பட்ட பண உடைமைகளின் அசாதாரண கூடிய மட்டமே காரணமாகும். அட்டவணை II (ஈ) 8இல் காட்டப்பட்டுள்ளவாறு இவவாண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் பண உடைமைகளின் மாதாந்தச் சராசரி அளவு சென்ற ஆண்டினதிலும் பார்க்கக் குறைவுற்றிருந்தது. முதல் ஒன்பது மாதங்களிலும் மொத்த வைப்புக்களுக்கான பணத்தின் மாதாந்தச் சராசரி விகிதமும், 1969ஆம் ஆண்டின் 13.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 12.7 சதவீதத்தில் குறைவுற்றிருந்தது.

வர்த்தக வங்கிகளின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் ரூ. 188 இலட்சத்தால் அதிகரித்தன. மொத்த வைப்புக்களுக்கான திரவ இருப்புச் சொத்துக்களின் விகிதம் 1969 திசெம்பர் இறுதியில் 34.0 சதவீதத்திலிருந்து 1970 திசெம்பர் இறுதியில் 35.1 சதவீதமாக அதிகரித்தது. திரவ இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு கழிவுபட்ட உண்டியல்களினதும், அந்நிய நிலுவைகளினதும் முறையே ரூ. 1,522 இலட்சம், ரூ. 84 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினுல் ஒரளவிற்கு ஈடுசெய்யப்பட்ட பண உடைமைகளின் ரூ. 1,125 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், இறைசேரி உண்டியல்களின் ரூ. 2,365 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் கொண்டுள்ளது.

1969 திசெம்பர் இறுதி மொத்த வைப்புக்களில் வர்த்தக வங்கிகளின் இறைசேரி உண்டியல் உடைமைகள் 2.3 சதவீதமாகவிருந்து 1970 திசெம்பர் இறுதியில் 11.7 சதவீதமாகக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்கு, பண மதிப்பு நீக்கத்தின்பின் வங்கிகளிலுள்ள அதிகரித்த பொருள் வளங்களே பிரதான காரணமாகும். இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களிலுமான இறைசேரி உண்டியல் உடைமைகளின் மாதாந்தச் சராசரி, 1969இன் மொத்த வைப்புக்களில் ரூ. 50 இலட்சம் அல்லது 2.7 சதவீதம் கொண்ட சராசரியுடன் ஒப்புநோக்குகையில், ரூ. 41 இலட்சமாக அல்லது 2.1 சதவீதமாக விளங்கியது. ஏற்கெனவே விளங்கப்படுத்தியவாறு கழிவுபட்ட உண்டியல்களின் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சிக்குச் சில காலமாக வர்த்தக வங்கிகளிலிருந்த அரசாங்க இறக்குமதி உண்டியல்களை எடுப்பனவு செய்தமையே காரணமாகும்.

ஆகவே, இவ்வாண்டின் இறுதி மூன்று மாதங்களிலும் சாதாரண நிலையிலும் பார்க்கக் கூடுதலாயமைந்த வர்த்தக வங்கிகளின் திரவ நிலை, முதல் ஒன்பது மாதங்களிலும் குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டது. 1970ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் மொத்த வைப்புக்களில் கடன்களினதும், மேலதிகப்பற்றுக்களினதும் மாதாந்தச் சராசரி அளவு 71.4 சதவீதமாக விளங்கியது. ஒப்புநோக்குகையில் இவ் அளவை, 1969ஆம் ஆண்டில் 66.6 சதவீதமாக விளங்கியது. வங்கிகள் தமது முதலீட்ட உடைமைகளை 1969ஆம் ஆண்டின் மொத்த வைப்புக்களினது 14.8 சதவீதம் கொண்ட மாதாந்தச் சராசரியிலிருந்து 1970ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் 13.5 சதவீதத்திற்குக் குறைக்கவேண்டியிருந்தது; இறுதி மூன்று மாதங்களிலும் அவற்றின் திரவ நிலையில் ஏற்பட்ட அதிகரிப்புடன், 1970 திசெம்பர் இறுதியில் இவ்விகிதம் 15.1 சதவீதமாக உயர்வுற்றது. மொத்த வைப்புக்களில் கடன்களினதும், மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் 1970 திசெம்பர் இறுதியில் 58.6 சதவீதமாக வீழ்ச்சியுற்றது.

**2. (ஈ) நிதிகளின் மூலங்களும் அவற்றின் பயன்பாடும்**

சென்ற ஆண்டிற்கு மாருக, 1970ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளுடனை தனியார் துறைக் கொடுக்கல்வாங்கல்கள், அரசாங்கத் துறையில் பயன்படுத்துதற்கான குறிப்பிடத்தக்களவு பொருள்வளங்களை அளித்தன. வர்த்தக வங்கிப் பொருள்வளங்களுக்கான அரசாங்கக் கேள்வி சென்ற ஆண்டிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது; வங்கிகள் இவ்வதிகரித்த

கேள்வியை தனியார் துறையினுல் அளிக்கப்பட்ட பொருள்வளங்கள் மூலம் நிவர்த்திசெய்யமுடியுமாயிருந்தன. வர்த்தக வங்கிகள், மத்திய வங்கியில் கடன் பெறுவதற்குத் தங்கியிருக்கும் நிலையும், இவ்வாண்டின்போது குறிப் பிடத்தக்களவு குறைவுற்றது.

தனியார் துறையில், கூட்டுறவுகள் வங்கிப் பொருள்வளங்களின் குறிப் பிடத்தக்களவு அதிகரித்த தொகையைப் பயன்படுத்தின; ஆனுல் வங்கிப் பொருள்வளங்களின் வளர்ச்சிக்குச் சிறு உதவியையேயளித்தன. கூட்டுறவு களுக்கான பொருள்வளங்களின் அதிகரிப்பு ரூ. 1,463 இலட்சமாக விளங்கி, முற்றிலும் முற்பணங்களின் அதிகரிப்பிலேயே பிரதிபலிக்கப்பட்டுள்ளது. வைப் புக்களின் அதிகரிப்பு மூலம் வங்கிப் பொருள்வளங்களுக்கான அவற்றின் பங்கு, ரூ. 190 இலட்சமாக விளங்கியது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், முற்பணங்கள்மூலம் ரூ, 431 இலட்சம் கொண்ட அளவிற்கு வங்கிப் பொருள் வளங்களைப் பயன்படுத்தின; ஆனுல் வைப்புக்களின் ரூ. 447 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுல் சிறிது கூடியளவு பொருள்வளங்களை அளித்தன. ஏனைய தனியார் துறை ரூ. 3,634 இலட்சம் கொண்ட அதிகரித்த பொருள் வளங்களை வங்கிகளுக்கு அளித்தது. இவ்வதிகரிப்பு. வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 341 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், முற்பணங்களிலும் முதலீடுகளி லும் ஏற்பட்ட ரூ. 215 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும் உள்ளடக்குகின்றது.

வர்த்தக வங்கிப் பொருள்வளங்களின் அதிகரிப்பில், அரசாங்கத் துறை ரூ. 3,356 இலட்சத்தைப் பயன்படுத்தியது. இத்தொகை, ஏறக்குறைய முற்றி லும் வர்த்தகவங்கிகள் வசமுள்ள அரசாங்கப் பத்திர உடைமைகளின் ரூ. 3,350 இலட்சம் கொண்ட அதிகரிப்பால் ஏற்பட்டது. இது, சென்ற ஆண்டில் அர சாங்கப் பத்திர உடைமைகள் ரூ. 830 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றமைக்கு மாருக அமைந்துள்ளது. அரசாங்கத் துறையிலிருந்து பெற்ற வர்த்தக வங் கிப் பொருள்வளங்களின் சேர்க்கை ரூ. 2,155 இலட்சமாக விளங்கியது. இது, வைப்புக்களின் ரூ. 737 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், இறக்கு மதி உண்டியல்களின் ரூ 1,418 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும் உள்ள டக்குகின்றது. ஆகவே, ரூ. 1,201 இலட்சம் கொண்ட தொகை வர்த்தக வங்கிகளிலிருந்து அரசாங்கத்திற்குச் சென்றது.

அந்நிய துறையிலிருந்து வங்கிகளுக்குக் கிடைக்கப்பெற்ற பொருள்வளங் களின் தேறிய அதிகரிப்பு, 1969இன் ரூ. 266 இலட்சம் கொண்ட தேறிய அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில், 1970இல் ரூ. 12 இலட்சமாக விளங் கியது. உள்நாட்டு வர்த்தக வங்கித் துறையில் சேரும் பொருள்வளங்கள் ரூ. 776 இலட்சமாகவிருக்கையில், இத்துறையில் பயன்படுத்தப்படும் தொகை, சேர்க்கையைவிட ரூ 347 இலட்சம் மேலாக விளங்கியது. இப்பயன்பாடு பிரதானமாக 'நிலையான இருப்புச் சொத்துக்களினதும் ஏனைய இருப்புச் சொத்துக்களினதும்' அதிகரிப்பில் ஏற்பட்டது.

ஒதுக்குகளின் அதிகரிப்பினுல் மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிப் பொருள்வளங்களின் அதிகரிப்பு ரூ. 883 இலட்சமாக அமைந்திருக்கையில், மத்திய வங்கியிலிருந்து வங்கிகள் பெற்ற பொருள்வளங்களின் அதிகரிப்பு ரூ. 43 இலட்சமாக விளங்கியது. இது, சென்ற ஆண்டில் மத்திய வங்கியி லிருந்து வங்கிகள் பெற்ற பொருள்வளங்கள் ரூ. 893 இலட்சமாக அமைந் தமைக்கு மாருகவுள்ளது. இவை கடன்பாடுகளின் ரூ. 843 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும், ஒதுக்குகளின் ரூ. 50 இலட்சம்கொண்ட வீழ்ச்சியையும் உள்ளடக்குகின்றது.

ஆண்டு முழுவதையும் ஒருமித்து நோக்கின், இங்கு தரப்பட்டுள்ள பொது வான அமைப்பு ஏனைய தனியார் துறையினுல் வங்கிகளுக்குக் கிடைக்கப் பெற்ற பொருள்வளங்களினுல், அரசாங்கத்திலிருந்தும், கூட்டுறவுகளிலிருந்தும் வங்கிகள் மீது எழுந்த கேள்விகளைத் தீர்க்கமுடியுமாயிருந்தமையாகும். ஏனைய தனியார் துறையிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருள்வளங்கள் போது மாயிருந்தமையால், சென்ற ஆண்டில் வங்கிகள் தமது வளங்களை அதிகரிப்

## அட்டவணை II (ஈ) 9

## வங்கிகளினது வளங்களின் ஆண்டு மாற்றங்களும், அவற்றின் பயன்பாடுகளும் 1967 – 1970

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1967 | 1968 | 1969 | 1970 |
|---|---|---|---|---|
| **நிதிகளின் மூலங்கள்** | | | | |
| 1. **அரசாங்கத் துறை** ... | 64.3 | 150.9 | 83.0 | 215.5 |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் குறைப்பு ... | 64.3 | — | 83.0 | — |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | — | 25.9 | — | 73.7 |
| இறக்குமதி உண்டியல்களின் வீழ்ச்சி ... | — | 125.0 | — | 141.8 |
| குறுந்தவணைக் கொடுகடனின் வீழ்ச்சி ... | — | — | — | — |
| 2. **மத்திய வங்கி** ... | 59.3 | 2.3 | 89.3 | 4.3 |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு ... | 59.3 | — | 84.3 | 4.3 |
| ஒதுக்குகளின் வீழ்ச்சி ... | — | 2.3 | 5.0 | — |
| 3. **அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்** ... | 93.5 | — | — | 44.7 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | 93.5 | — | — | 44.7 |
| முற்பணங்களின் வீழ்ச்சி ... | — | — | — | — |
| 4. **கூட்டுறவுகள்** ... | 9.9 | 0.6 | — | 19.0 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | 9.9 | 0.6 | — | 19.0 |
| முற்பணங்களின் வீழ்ச்சி ... | — | — | — | — |
| 5. **ஏனைய உள்நாட்டுத் தனியார் துறை** ... | 50.0 | 167.1 | 132.9 | 363.4 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | 50.0 | 167.1 | 132.9 | 341.9 |
| முற்பணங்களினதும் முதலீடுகளினதும் வீழ்ச்சி ... | — | — | — | 21.5 |
| 6. **வங்கிகளுக்கிடையில்** ... | 108.3 | 62.5 | 35.8 | 77.6 |
| மூலதனத்திலும் ஒதுக்குகளிலுமான அதிகரிப்பு ... | 7.3 | 6.1 | 14.5 | 17.8 |
| நிலையான இருப்புச் சொத்துக்களிலும், ஏனைய இருப்புச் சொத்துக்களிலுமான வீழ்ச்சி ... | — | — | 0.1 | — |
| 'ஏனைய' பொறுப்புக்களின் அதிகரிப்பு ... | 81.3 | 52.4 | 21.2 | 57.9 |
| வங்கிக்கிடையிலான கொடுக்கல்வாங்கல் (தேறிய) ... | — | 4.0 | — | 1.9 |
| கைப்பணத்தின் வீழ்ச்சி ... | 19.7 | — | — | — |
| 7. **வெளிநாட்டுத் துறை** ... | 1.0 | 7.3 | 27.6 | 9.1 |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு ... | — | 7.1 | 3.0 | — |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | 1.0 | 0.2 | — | 0.7 |
| வெளிநாட்டு நிலுவைகளின் வீழ்ச்சி ... | — | — | 24.6 | 8.4 |
| **வளங்களின் மொத்த அதிகரிப்பு** ... | 386.3 | 390.7 | 368.6 | 733.6 |
| **நிதிகளின் பயன்பாடுகள்** | | | | |
| 1. **அரசாங்கத் துறை** ... | 157.7 | 10.1 | 100.4 | 335.6 |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் அதிகரிப்பு ... | — | 10.1 | — | 335.0 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | 18.2 | — | 4.3 | — |
| அரசாங்க இறக்குமதி உண்டியல்களின் அதிகரிப்பு ... | 139.5 | — | 87.9 | — |
| குறுந் தவணைக் கொடுகடனின் அதிகரிப்பு ... | — | — | 8.2 | 0.6 |
| 2. **மத்திய வங்கி** ... | 55.9 | 14.8 | — | 88.3 |
| கடன்பாடுகளின் வீழ்ச்சி ... | — | 14.8 | — | — |
| ஒதுக்குகளின் அதிகரிப்பு ... | 55.9 | — | — | 88.3 |
| 3. **அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்** ... | 11.4 | 115 5 | 85.4 | 43.1 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | — | 24.9 | 15.5 | — |
| முற்பணங்களின் அதிகரிப்பு ... | 11.4 | 90.6 | 69.9 | 43.1 |
| 4. **கூட்டுறவுகள்** ... | 7.3 | 18.5 | 23.8 | 146.3 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | 3.9 | — |
| முற்பணங்களின் அதிகரிப்பு ... | 7.3 | 18.5 | 19.9 | 146.3 |
| 5. **ஏனைய உள்நாட்டு தனியார் துறை** ... | 87.9 | 181.8 | 142.1 | — |
| வை ப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | — | — |
| முற்பணங்களினதும் முதலீடுகளினதும் அதிகரிப்பு ... | 87.9 | 181.8 | 142.1 | — |
| 6. **வங்கிகளுக்கிடையில்** ... | 58.7 | 39.4 | 15.7 | 112.3 |
| மூலதனத்திலும், ஒதுக்குகளிலுமான வீழ்ச்சி ... | — | — | — | — |
| நிலைய ன இருப்புச் சொத்துக்களிலும், ஏனைய இருப்புச் சொத்துக்களிலுமான வீழ்ச்சி ... | 57.7 | 17.6 | — | 88.1 |
| 'ஏனைய' பொறுப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | — | — |
| வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் (தேறிய) ... | 1.0 | — | 0.8 | — |
| கைப்பணத்தின் அதிகரிப்பு ... | — | 21.8 | 14.9 | 24.2 |
| 7. **வெளிநாட்டுத் துறை** ... | 7.3 | 10.6 | 1.0 | 7.9 |
| கடன்பாடுகளின் வீழ்ச்சி ... | 0.9 | — | — | 7.9 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | 1.0 | — |
| வெளிநாட்டு நிலுவைகளின் அதிகரிப்பு ... | 6.4 | 10.6 | — | — |
| **பயன்படுத்தப்பட்ட நிதிவளங்களினது மொத்த அதிகரிப்பு** ... | 386.2 | 390.7 | 368.4 | 733.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. இவ்விடயம் அரசாங்கக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட காசோலைகள், காசுக் கட்டளைகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

2. வர்த்தக வங்கித் துறையிலுள்ள கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எற்படும் இருப்புச் சொத்துக்கள்/பொறுப்புக் களிலுள்ள எல்லா மாற்றங்களையும் இவ்விடயம் காட்டுகின்றது. வங்கிகளினது ஏனைய பொறுப்புக்களின் மாற்றங்களினால் எற்படும் சில கொடுக்கல்வாங்கல்கள் தனியார் துறையைச் சார்ந்தனவாயினும், இப்பல் வகைப்பட்ட விடயத்திலுள்ள மாற்றங்களைக் கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுகள், ஏனைய தனியார் துறை எனப் பகுக்கும் இடர்ப்பாட்டினால் இவை, இவ்விடயத்தில் காட்டப்பட்டுள்ளன.

## அட்டவணை II (ஈ) 10

### தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்*
### 1969 திசெம்பர் — 1970 திசெம்பர்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | இலங்கை வங்கிகள் | | | அந்நிய வங்கிகள் | | | சகல வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திசெம்பர் 1969 | திசெம்பர் 1970 | மாற்றம் | திசெம்பர் 1969 | திசெம்பர் 1970 | மாற்றம் | திசெம்பர் 1969 | திசெம்பர் 1970 | மாற்றம் |
| (அ) சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்கள்** ... | 33.1 | 171.2 | +138.1 | 0.8 | 0.2 | —6.0 | 33.8 | 171.4 | +137.6 |
| (ஆ) உள்ளூர் உண்டியல்கள் ... | — | — | — | — | — | — | — | — | — |
| (இ) இறக்குமதி உண்டியல்கள் ... | 35.0 | 16.1 | —18.9 | 32.9 | 20.8 | 12.1 | 67.9 | 36.9 | —31.0 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள் ... | 25.0 | 32.1 | +7.1 | 60.8 | 74.4 | +13.6 | 85.9 | 106.5 | +20.6 |
| (உ) மேலதிகப் பற்றுக்கள் ... | 379.1 | 342.9 | —36.2 | 246.2 | 245.8 | —0.4 | 625.3 | 588.7 | —36.6 |
| (ஊ) கடன்கள் ... | 637.9 | 731.4 | +93.5 | 99.2 | 82.8 | —16.4 | 737.0 | 814.2 | +77.2 |
| மொத்தம் ... | 1110.1 | 1293.7 | +183.6 | 439.9 | 424.0 | —15.9 | 1549.9 | 1717.7 | +167.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் உள்ளடக்கும்.

** சேகரிப்புக்கென்று அனுப்பப்பட்ட காசோலைகள், காசுக் கட்டளைகள் ஆகியவற்றையும், உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கென நிதிஉதவி செய்வதற்குக் கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட குறுந் தவணை முற்பணங்களையும், இப்பகுப்பு உள்ளடக்குகின்றது.

பதற்காகக் குறிப்பிடத்தக்களவு கடன்பாடுகளைப் பெறுவதற்கு மத்திய வங்கியை நாடவேண்டியிருந்தமைக்கு மாருக, இப்பொழுது வங்கிகள் கடன்களைப் பெறுவதற்குச் சிறு தேவையே ஏற்பட்டது. இவ்வாண்டின் முதல் அரைப் பகுதியில் கூட்டுறவுகளினாலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினாலும் பயன்படுத்தப்பட்ட பொருள்வளங்களினது அதிகரிப்பின் பிரதான பங்கை, மத்திய வங்கியும், 'ஏனைய உள்நாட்டுத் தனியார் துறையும்' அளித்தமையை நோக்கும்பொழுது, இக்காலப்பகுதியில் இந்நிலைமை வேறுபட்டிருந்தது.

**2. (உ) தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன்**

சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்களின் ரூ. 1,376 இலட்சம் கொண்ட ஆகக்கூடிய அதிகரிப்பு, தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் அதிகரிப்பின் பிரதான பங்காக விளங்கியது; சென்ற ஆண்டில் இவ்விடயம் ரூ. 187 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. 1970இல் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்கு உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெற் கொள்வனவுக்காக வழங்கப்படும் பொருள் வரவு முற்பணங்களின் ரூ. 1,443 இலட்சம் கொண்ட அதிகரிப்பே முற்றிலும் காரணமாகும்.

வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 772 இலட்சத்தால் அதிகரித்தன; இதில் ரூ. 713 இலட்சம் நடுத்தர - நீண்ட தவணைக் கடன்களால் ஏற்பட்டவையாகும். மறுபுறம், மேலதிகப் பற்றுக்கள் ரூ. 336 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. ஏற்றுமதி உண்டியல்கள் ரூ. 206 இலட்சம்கொண்ட அதிகரிப்பைக் காட்டியிருக்கையில், இறக்குமதி உண்டியல்கள் ரூ. 301 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

வர்த்தக வங்கிகளின் முற்பணங்களை தேவைகளின்படியும், முதிர்வுகாலங்களின்படியும் பாகுபடுத்தி அட்டவணை II (ஈ) 11 தருகின்றது. இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் யாவும் வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள், முற்பணங்கள் சம்பந்தமாக மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட அளவையிலிருந்து தயாரிக்கப்பட்டவையாகும். இவ் அளவை, அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உட்பட, தனியார் துறைக்கான முற்பணங்களை உள்ளடக்குகின்றது, இம்முற்பணங்கள், சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்களைத் தவிர்த்து, கடன்களையும், மேலதிகப்பற்றுக்களையும், ஏற்றுமதி, இறக்குமதி உண்டியல்களையும் குறிப்பனவாகும்.

மொத்த முற்பணங்களில், விவசாயத் தேவைகளுக்கான முற்பணங்கள் 1969 இறுதியில் 11.7 சதவீதத்திலிருந்து 1970 இறுதியில் 13.1 சதவீதமாக உயர்வுற்றிருக்கையில், கைத்தொழில் தேவைகளுக்கான முற்பணங்கள் 25.6 சதவீதத்திலிருந்து 26.9 சதவீதமாக உயர்வுற்றது. மறுபுறம், வர்த்தகம், நிதி ஆகிய தேவைகளுக்கான முற்பணங்கள் 44.2 சதவீதத்திலிருந்தும், 9.2 சதவீதத்திலிருந்தும் முறையே 41.7 சதவீதமாகவும், 8.9 சதவீதமாகவும் வீழ்ச்சியுற்றன. நுகர்ச்சித் தேவைகளுக்கான முற்பணங்கள் சிறு மாற்றத்தைக் காட்டியிருக்கையில், 'ஏனைய கடன்கள்' 1969ஆம் ஆண்டிறுதி மொத்த முற்பணங்களில் வகுத்த அதே பங்கை வைத்திருந்தன. முழு நியதிகளின்படி, மொத்த முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 306 இலட்சம்கொண்ட அதிகரிப்பு பிரதானமாக கைத்தொழில் முற்பணங்களுக்கான ரூ 287 இலட்சம் கொண்ட அதிகரிப்பினாலும், விவசாய முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 264 இலட்சம் கொண்ட அதிகரிப்பினாலும், வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 248 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினாலும் ஏற்பட்டதாகும்.

கைத்தொழில் துறைக்கான முற்பணங்களின் ரூ. 287 இலட்சம்கொண்ட அதிகரிப்பு, 1969இல் ஏற்பட்ட ரூ. 1,556 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்கு முழு மாருக அமைந்துள்ளது. இம்முற்பணங்கள் 1970இன் இரண்டாம் காலாண்டில் ரூ. 608 இலட்சம் ரூபாய்களால் கடுமையாக அதிகரித்து, ஆனால் இறுதி இரு காலாண்டுகளிலும் ரூ. 321 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

# அட்டவணை II (ஈ) 11

## தேவைகளின்படியும், முதிர்வு காலங்களின்படியும் பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | | குறுகிய கால | | நடுத்தர கால | | நீண்ட கால | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) (7) ன் சதவீத மாக (1) | (3) | (4) (7)ன் சதவீத மாக (3) | (5) | (6) (7)ன் சதவீத மாக(5) | (7) | (8) மொத் தத்தின் சதவீத மாக(7) |
| **அ. வர்த்தகம்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1969 | 271.4 | 40.6 | 277.0 | 41.4 | 120.3 | 18.0 | 668.7 | 44.2 |
| மாச்சு | 1970 | 292.1 | 44.1 | 252.2 | 38.1 | 118.4 | 17.9 | 662.6 | 43.2 |
| யூன் | 1970 | 277.9 | 42.8 | 255.7 | 39.4 | 115.4 | 17.8 | 648.9 | 41.5 |
| செத்தெம்பர் | 1970 | 517.0 | 79.9 | 90.8 | 14.0 | 39.2 | 6.1 | 647.0 | 42.0 |
| திசெம்பர் | 1970 | 502.4 | 78.0 | 104.6 | 16.2 | 36.8 | 5.7 | 643.9 | 41.7 |
| **ஆ. நிதி** | | | | | | | | | |
| திசெம்பர் | 1969 | 47.1 | 34.0 | 45.2 | 32.6 | 46.3 | 33.4 | 138.6 | 9.2 |
| மாச்சு | 1970 | 52.0 | 37.6 | 42.0 | 30.4 | 44.3 | 32.0 | 138.3 | 9.0 |
| யூன் | 1970 | 60.2 | 41.1 | 37.5 | 25.6 | 48.6 | 33.2 | 146.4 | 9.4 |
| செத்தெம்பர் | 1970 | 78.4 | 53.7 | 38.2 | 26.1 | 29.5 | 20.2 | 146.0 | 9.5 |
| திசெம்பர் | 1970 | 74.8 | 54.5 | 33.3 | 24.2 | 29.2 | 21.3 | 137.3 | 8.9 |
| **இ. விவசாயம்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1969 | 25.6 | 14.5 | 105.2 | 59.6 | 45.8 | 25.9 | 176.6 | 11.7 |
| மாச்சு | 1970 | 40.4 | 20.0 | 106.1 | 52.4 | 55.8 | 27.6 | 202.3 | 13.2 |
| யூன் | 1970 | 24.1 | 12.9 | 106.6 | 57.2 | 55.5 | 29.8 | 186.2 | 11.9 |
| செத்தெம்பர் | 1970 | 88.3 | 47.7 | 69.6 | 37.5 | 27.5 | 14.8 | 185.3 | 12.0 |
| திசெம்பர் | 1970 | 91.8 | 45.2 | 85.6 | 42.2 | 25.6 | 12.6 | 203.0 | 13.1 |
| **ஈ. கைத்தொழில்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1969 | 158.5 | 40.9 | 82.0 | 21.2 | 146.8 | 37.9 | 387.3 | 25.6 |
| மாச்சு | 1970 | 147.9 | 38.1 | 82.5 | 21.3 | 157.2 | 40.5 | 387.7 | 25.3 |
| யூன் | 1970 | 177.1 | 39.5 | 76.1 | 17.0 | 194.8 | 43.5 | 448.1 | 28.7 |
| செத்தெம்பர் | 1970 | 202.7 | 48.0 | 150.7 | 35.7 | 68.8 | 16.3 | 422.2 | 27.4 |
| திசெம்பர் | 1970 | 197.0 | 47.3 | 151.5 | 36.4 | 67.4 | 16.2 | 416.0 | 26.9 |
| **உ. நுகர்ச்சி** | | | | | | | | | |
| திசெம்பர் | 1969 | 15.4 | 15.6 | 32.7 | 33.1 | 50.7 | 51.3 | 98.8 | 6.5 |
| மாச்சு | 1970 | 16.3 | 16.9 | 30.4 | 31.5 | 49.6 | 51.3 | 96.6 | 6.3 |
| யூன் | 1970 | 14.7 | 16.0 | 29.6 | 32.2 | 47.5 | 51.7 | 91.9 | 5.9 |
| செத்தெம்பர் | 1970 | 22.1 | 22.6 | 46.4 | 47.5 | 29.2 | 29.9 | 97.7 | 6.3 |
| திசெம்பர் | 1970 | 22.1 | 22.3 | 50.9 | 51.4 | 26.1 | 26.3 | 99.1 | 6.4 |
| **ஊ. ஏனைய கடன்கள்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1969 | 3.8 | 8.8 | 24.1 | 55.5 | 15.6 | 35.9 | 43.4 | 2.9 |
| மாச்சு | 1970 | 11.9 | 25.6 | 18.1 | 38.9 | 16.4 | 35.3 | 46.5 | 3.0 |
| யூன் | 1970 | 10.6 | 25.1 | 15.1 | 35.7 | 16.5 | 39.1 | 42.2 | 2.7 |
| செத்தெம்பர் | 1970 | 21.2 | 48.3 | 17.9 | 40.8 | 4.8 | 10.9 | 43.8 | 2.8 |
| திசெம்பர் | 1970 | 21.4 | 47.7 | 18.2 | 40.5 | 5.3 | 11.8 | 44.9 | 2.9 |
| **எ. மொத்தம்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1969 | 521.7 | 34.5 | 566.2 | 37.4 | 425.5 | 28.1 | 1513.5 | 100.0 |
| மாச்சு | 1970 | 560.8 | 36.6 | 531.3 | 34.6 | 441.8 | 28.8 | 1534.1 | 100.0 |
| யூன் | 1970 | 564.7 | 36.1 | 520.6 | 33.3 | 478.4 | 30.6 | 1563.7 | 100.0 |
| செத்தெம்பர் | 1970 | 929.6 | 60.3 | 413.5 | 26.8 | 199.0 | 12.9 | 1542.1 | 100.0 |
| திசெம்பர் | 1970 | 909.6 | 58.9 | 444.0 | 28.7 | 190.5 | 12.3 | 1544.1 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* முற்பணங்களாவன, கடன்கள், மேலதிகப் பற்றுக்கள், கழிவுபட்ட உண்டியல்கள் ஆகியனவற்றை (சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி) உட்படுத்தும்.

கவனிப்பு: 1970 செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறான அளவை தொடக்கம், இதுவரை 6 மாதத்திற்குக் கீழும், 6 தொடக்கம் 30 மாதங்கள் வரையும், 30 மாதங்களுக்கு மேலாகவுமுள்ள குறுகிய, நடுத்தர, நீண்டகால முற்பணங்கள் முறையே 1 ஆண்டிற்குக் கீழும், 1 தொடக்கம் 5 ஆண்டுகள் வரையும், 5 ஆண்டுகளுக்கு மேலாகவும் மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாண்டின்போது ஏற்பட்ட ரூ. 287 இலட்சம் கொண்ட அதிகரிப்பில், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ரூ. 75 இலட்சத்தைப் பயன்படுத்தியிருக்கையில், தனியார் துறையிலுள்ள ஏனைய கடன்பெறுநர், மீதி ரூ. 212 இலட்சத்தைப் பயன்படுத்தினர். கைத்தொழில் வகைப்படி ஆகக்கூடிய அதிகரிப்பு 'ஏனைய கைத்தொழில்களிலும்' (ரூ. 169 இலட்சம்), அதன்பின் முறையே இரசாயனப் பொருட்களிலும் (ரூ. 80 இலட்சம்) தேயிலை, இரப்பர், தெங்குப் பொருட்களைப் பதனிடுதலிலும் (ரூ. 70 இலட்சம்), உலோகப் பொருட்களிலும் (ரூ. 68 இலட்சம்) ஏற்பட்டன. 1969இல், ரூ. 469 இலட்சம்கொண்ட ஆகக்கூடிய அதிகரிப்பைப் பதிவுசெய்த ஆடைக் கைத்தொழில்கள் ரூ. 84 இலட்சம்கொண்ட வீழ்ச்சியைக் காட்டின. ஏனைய பகுப்புக் கைத்தொழில்களுக்கான முற்பணங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பிடத்தக்கனவல்ல. 1970ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிறுதியிலும், 1969இன் இறுதிக் காலாண்டிலும் கைத்தொழில் தேவைகளுக்காக வழங்கப்பட்ட வெளிநிற்கும் முற்பணங்களின் விபரமான பகுப்பு அட்டவணை II (ஈ) 12இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஈ) 12

### கைத்தொழில் தேவைகளுக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | இறுதியில் வெளிநின்ற தொகை | | | | |
|---|---|---|---|---|---|
| | திசெம்பர் 1969 | மாச்சு 1970 | யூன் 1970 | செத்தெம்பர் 1970 | திசெம்பர் 1970 |
| 1. ஆடைகள் | **95.2** | **93.7** | **115.1** | **98.1** | **86.8** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 35.7 | 26.3 | 44.0 | 29.8 | 21.2 |
| ஏனையவை | 59.5 | 67.5 | 71.1 | 68.3 | 65.6 |
| 2. உலோகப் பொருட்கள் | **35.7** | **35.6** | **39.1** | **43.0** | **42.5** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 13.3 | 12.7 | 12.7 | 14.6 | 14.7 |
| ஏனையவை | 22.5 | 23.0 | 26.5 | 28.4 | 27.8 |
| 3. இரசாயனப் பொருட்கள் | **50.0** | **51.9** | **61.5** | **58.5** | **58.0** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 30.3 | 30.0 | 39.9 | 39.2 | 38.6 |
| ஏனையவை | 19.7 | 21.9 | 21.6 | 19.3 | 19.4 |
| 4. காலணிகளும், தோற்பொருட்களும் | **6.8** | **6.4** | **6.8** | **6.2** | **6.6** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 4.5 | 4.5 | 5.0 | 4.4 | 4.7 |
| ஏனையவை | 2.3 | 1.9 | 1.8 | 1.8 | 1.9 |
| 5. விசுக்கோத்தும், இனிப்புப் பதார்த்தங்களும் | **8.3** | **7.2** | **6.4** | **6.4** | **6.7** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | — | — | — | — | — |
| ஏனையவை | 8.3 | 7.2 | 6.6 | 6.4 | 6.7 |
| 6. தேயிலை, இரப்பர், தெங்குப்பொருட்கள் ஆகியவற்றைப் பதனிடுதல் | **22.0** | **22.2** | **25.0** | **29.0** | **29.0** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | — | — | — | — | — |
| ஏனையவை | 22.0 | 22.2 | 25.0 | 29.0 | 29.0 |
| 7. பொறியியலும், கட்டட ஆக்கமும் | **50.5** | **51.5** | **52.2** | **50.9** | **50.9** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 11.8 | 10.0 | 13.7 | 10.2 | 12.1 |
| ஏனையவை | 38.7 | 41.5 | 38.5 | 40.7 | 38.8 |
| 8. ஏனைய கைத்தொழில்கள் | **118.6** | **119.1** | **141.7** | **130.1** | **135.8** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 57.0 | 60.6 | 75.4 | 64.9 | 68.8 |
| ஏனையவை | 61.6 | 58.5 | 66.3 | 65.2 | 66.2 |
| மொத்தம் | **387.3** | **387.7** | **448.1** | **422.2** | **416.0** |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 152.6 | 144.0 | 190.6 | 163.0 | 160.1 |
| ஏனையவை | 234.7 | 243.7 | 257.5 | 259.2 | 255.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

# அட்டவணை II (ஈ) 13

## வட்டி வீதங்களின்படியுள்ள முற்பணங்கள்*

| வட்டி வீதம் (சத வீதமாக) | திசெம்பர் 31 1969 | | மாச்சு 31 1970 | | யூன் 30 1970 | | செத்தெம்பர் 30 1970 | | திசெம்பர் 31 1970 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக |
| 4½க்குக் கீழ் ... | 21.4 | 1.5 | 22.8 | 1.5 | 16.9 | 1.1 | 8.6 | 0.6 | 11.7 | 0.8 |
| 5 ,, ,, ... | 22.0 | 1.5 | 26.2 | 1.8 | 26.9 | 1.8 | 20.7 | 1.5 | 26.8 | 1.9 |
| 5½ ,, ,, ... | 21.0 | 1.5 | 3.1 | 0.2 | 3.6 | 0.2 | 3.2 | 0.2 | 3.1 | 0.2 |
| 6 ,, ,, ... | 211.7 | 14.8 | 87.6 | 6.0 | 85.3 | 5.8 | 48.9 | 3.4 | 51.0 | 3.5 |
| 6½ ,, ,, ... | 132.0 | 9.3 | 47.1 | 3.2 | 49.6 | 3.4 | 52.2 | 3.7 | 46.4 | 3.2 |
| 7 ,, ,, ... | 108.0 | 7.6 | 176.1 | 12.0 | 194.2 | 13.2 | 224.8 | 15.8 | 231.2 | 16.1 |
| 7½ ,, ,, ... | 302.9 | 21.2 | 160.7 | 11.0 | 159.6 | 10.9 | 149.0 | 10.5 | 140.4 | 9.8 |
| 8 ,, ,, ... | 316.5 | 22.2 | 184.0 | 12.6 | 163.7 | 11.1 | 173.4 | 12.2 | 166.9 | 11.6 |
| 8½ ,, ,, ... | 62.1 | 4.4 | 229.9 | 15.7 | 255.4 | 17.4 | 232.8 | 16.4 | 254.7 | 17.7 |
| 9 ,, ,, ... | 142.5 | 10.0 | 319.5 | 21.8 | 312.2 | 21.2 | 289.2 | 20.4 | 274.9 | 19.1 |
| 9½ ,, ,, ... | 11.0 | 0.8 | 46.0 | 3.1 | 50.5 | 3.4 | 53.3 | 3.8 | 52.0 | 3.6 |
| 10 ,, ,, ... | 26.6 | 1.9 | 64.5 | 4.4 | 72.0 | 4.9 | 77.9 | 5.5 | 85.6 | 5.9 |
| 10½ ,, ,, ... | 22.1 | 1.5 | 12.5 | 0.8 | 10.9 | 0.7 | 10.7 | 0.7 | 7.8 | 0.5 |
| 11 ,, ,, ... | 25.6 | 1.8 | 38.4 | 2.6 | 36.4 | 2.5 | 36.3 | 2.6 | 37.1 | 2.6 |
| 11½ ,, ,, ... | ... | ... | 0.7 | ... | 1.6 | 0.1 | 0.5 | ... | 6.5 | 0.5 |
| 12உம் அதற்கு மேலும் ... | 1.4 | 0.1 | 45.2 | 3.1 | 30.8 | 2.1 | 38.7 | 2.7 | 42.7 | 3.0 |
| மொத்தம் ... | 1,426.7 | 100.0 | 1,464.3 | 100.0 | 1,469.6 | 100.0 | 1,420.2 | 100.0 | 1,438.9 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* நடைமுறைச் செலாவணி வீதங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களையும், சேகரிப்பு நிலையிலிருக்கும் பணவிடயங்களையும் நீக்கி.

வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்களில், இறக்குமதி வர்த்தகத்திற்கான முற்பணங்கள், 1969ஆம் ஆண்டின் ரூ. 168 இலட்சம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்புநோக்குகையில், இவ்வாண்டின்போது ரூ. 483 இலட்சத்தால் தொடர்பாக வீழ்ச்சியுற்றன. ஏற்றுமதி வர்த்தகத்திற்கும், மொத்த, சில்லறை ஆகிய வர்த்தகத்திற்குமான முற்பணங்கள், 1969ஆம் ஆண்டின் ரூ. 180 இலட்சம், ரூ. 77 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களுடன் ஒப்புநோக்குகையில் முறையே ரூ. 24 இலட்சத்தாலும், ரூ 32 இலட்சத்தாலும் வீழ்ச்சியுற்றன. ஏனைய வர்த்தக முற்பணங்கள், 1969ஆம் ஆண்டின் ரூ. 311 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்கு மாறாக ரூ. 290 இலட்சத்தால் அதிகரித்தன.

விவசாயத் தேவைகளுக்கான முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 264 இலட்சம் கொண்ட அதிகரிப்பில், அரைப்பங்கிலும் கூடிய பகுதி, ஏற்றுமதிப் பொருட்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. இம்முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, 1969இன் ரூ. 85 இலட்சத்திற்கு மாறாக ரூ. 146 இலட்சமாக விளங்கியது. நெல் உற்பத்திக்கான முற்பணங்களின் அதிகரிப்பு, 1969ஆம் ஆண்டின் ரூ. 140 இலட்சத்துக்கு மாறாக ரூ. 49 இலட்சமாக விளங்கியது. கால்நடை, பாற்பண்ணை உட்பட ஏனைய விவசாயப் பொருட்களுக்கான முற்பணங்கள் சென்ற ஆண்டின் ரூ. 138 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில், ரூ 69 இலட்சத்தால் உயர்வுற்றன.

நிதித் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூ. 13 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், நுகர்ச்சித் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூ. 3 இலட்சத்தால் சிறிதளவு அதிகரித்தன. 'ஏனைய கடன்கள்' ஆகிய எஞ்சிய பகுப்பு ரூ. 15 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது.

1969 இறுதியில் குறுகிய, நடுத்தர. நீண்ட தவணை முற்பணங்கள், வர்த்தக வங்கிகளின் மொத்த முற்பணங்களில் முறையே 84.5 சதவீதமாகவும், 37.4 சதவீதமாகவும், 28.1 சதவீதமாகவும் விளங்கின. அட்டவணை II (ஈ) 11இன் அடிக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு இப்பதங்களைத் திரும்பவரையறுக்கப்பட்டதும், நடுத்தர நீண்ட தவணை முற்பணங்களின் பங்கு முறையே 28.7 சதவீதமாகவும், 12.3 சதவீதமாகவும் வீழ்ச்சியுற்றிருக்கையில், குறுந்தவணை முற்பணங்களின் பங்கு தொடர்பாக 58.9 சதவீதமாக உயர்வுற்றது.

1970 இறுதியில் வெளிநின்ற ரூ. 1905 இலட்சம் கொண்ட நீண்ட தவணை முற்பணங்களில், 35.4 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய பங்கு கைத்தொழில் தொகுதியினாலும், அதன்பின் வர்த்தகத்தினாலும் (19.3 சதவீதம்), நிதியினாலும் (15.3 சதவீதம்), நுகர்வினாலும் (13.7 சதவீதம்), விவசாயத்தினாலும் (13.4 சதவீதம்), 'ஏனைய கடன்களினாலும்' (2.7 சதவீதம்) பயன்படுத்தப்பட்டது.

வட்டி வீதங்களின்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள் அட்டவணை II (ஈ) 13இல் காட்டப்பட்டுள்ளன.

ஆண்டுத் தொடக்கத்தில் வங்கி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன், கூடிய வீத வட்டிகளில் வழங்கப்படும் முற்பணங்களின் பங்கில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டது. 1969 இறுதி மொத்த முற்பணங்களில் 20.5 சதவீதமாக விளங்கிய $8\frac{1}{2}$ சதவீதத்திலும் அதற்கு மேலான வீதத்திலும் வழங்கப்படும் முற்பணங்கள், 1970 இறுதியில் 52.9 சதவீதமாக உயர்வுற்றன. முற்பணங்களின் ஆகக்கூடிய பங்கு 9 சதவீதமாகவிருக்கையில், ஓராண்டிற்கு முன் 8 சதவீதத்தில் இருந்தது.

பிணைகளின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்களின் பகுப்பு அட்டவணை II (ஈ) 14இல் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஈ) 14

## அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

| | திசெம்பர் 31 1969 | | மாச்சு 31 1970 | | யூன் 30 1970 | | செத்தெம்பர் 30 1970 | | திசெம்பர் 31 1970 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சத வீதமாக |
| ஆவண உண்டியல்கள் ... | 147.0 | 9.7 | 143.2 | 9.3 | 148.8 | 9.5 | 163.3 | 10.6 | 136.1 | 8.8 |
| அரசாங்கப் பிணைகள் ... | 18.0 | 1.2 | 17.9 | 1.2 | 19.4 | 1.2 | 15.3 | 1.0 | 22.9 | 1.5 |
| கூட்டுப்பங்கு நிலையங்களின் பங்கு முதல் ... | 19.8 | 1.3 | 23.2 | 1.5 | 24.9 | 1.6 | 24.7 | 1.6 | 24.5 | 1.6 |
| தவணை சேமிப்பு வைப்புக்களும், ஆயுட் காப்புறுதிகளின் பணப் பெறுமானங்களும் உட்பட ஏனைய பண வைப்புக்களும் ... | 73.6 | 4.9 | 50.7 | 3.3 | 47.8 | 3.1 | 47.0 | 3.0 | 50.1 | 3.2 |
| வியாபாரக் கையிருப்பு ... | 315.2 | 20.8 | 315.4 | 20.6 | 308.9 | 19.7 | 288.4 | 18.7 | 289.0 | 18.7 |
| அசைவற்ற சொத்து ... | 167.9 | 11.1 | 177.0 | 11.5 | 186.5 | 11.9 | 187.3 | 12.1 | 196.1 | 12.7 |
| உத்தரவாதங்கள் ... | 283.9 | 18.8 | 290.3 | 18.9 | 303.0 | 19.4 | 281.4 | 18.2 | 293.9 | 19.0 |
| நம்பிக்கைப் பற்றுச்சீட்டுகள் ... | 139.2 | 9.2 | 104.9 | 6.8 | 129.0 | 8.2 | 94.2 | 6.1 | 118.6 | 7.7 |
| தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள் | 32.4 | 2.1 | 30.8 | 2.0 | 28.9 | 1.8 | 28.3 | 1.8 | 22.3 | 1.4 |
| பொறித்தொகுதியும் இயந்திரவகையும் ... | 6.6 | 0.4 | 7.6 | 0.5 | 8.1 | 0.5 | 9.3 | 0.6 | 9.0 | 0.6 |
| இழு பொறிகளும், உந்து ஊர்திகளும் ... | 33.1 | 2.2 | 39.0 | 2.5 | 37.9 | 2.4 | 60.3 | 3.9 | 59.7 | 3.9 |
| வாக்குறுதிப்பத்திரங்கள், முறிகள், யூசன்ஸ்பத்திரங்கள் ஆகியன ... | 169.3 | 11.2 | 210.5 | 13.7 | 216.3 | 13.8 | 232.5 | 15.1 | 206.1 | 13.3 |
| ஏனையவை ... | 54.0 | 3.6 | 61.9 | 4.0 | 44.1 | 2.8 | 53.6 | 3.5 | 52.2 | 3.4 |
| பிணையற்றவை ... | 53.4 | 3.5 | 61.4 | 4.0 | 60.1 | 3.8 | 56.5 | 3.7 | 63.5 | 4.1 |
| மொத்தம் ... | 1,513.5 | 100.0 | 1,534.1 | 100.0 | 1,563.7 | 100.0 | 1,542.1 | 100.0 | 1,544.1 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* சேகரிப்பு நிலையிலுள்ள பணவிடயங்களை நீக்கி.

ஆவண உண்டியல்கள், நம்பிக்கை வருவாய்கள், கையிருப்பிலுள்ள வர்த்தகம் ஆகியவற்றை வைத்துப் பெறப்பட்ட முற்பணங்களின் வீழ்ச்சிக்கு, இவ்வாண்டில் விதிக்கப்பட்ட கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளே காரணமாயிருக்கலாம். அரசாங்கப் பிணைகளையும், கூட்டுப்பங்கு நிலையங்களின் பங்குகளையும் வைத்துப் பெறப்பட்ட முற்பணங்கள் சிறிதளவு அதிகரித்திருக்கையில், தவணை சேமிப்பு வைப்புக்களையும், ஏனைய பண வைப்புக்களையும் வைத்துப் பெறப்பட்ட முற்பணங்களில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டது. அசைவற்ற சொத்து, இழுபொறிகள், மோட்டார் வாகனங்கள், வாக்குறுதிப் பத்திரங்கள், முறிகள், யூசன்ஸ் பத்திரங்கள் ஆகியவற்றை வைத்துப் பெறப்பட்ட முற்பணங்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.

### 3. சேமிப்பு நிலையங்களும் நீண்ட காலக் கொடுகடன் நிலையங்களும்

அரசாங்கத்தால் நிறுவப்பட்ட சேமிப்பு நிலையங்களாலும், கடன் வழங்கும் நிறுவனங்களாலும் செய்யப்பட்ட கடன் வழங்கும் தொழிற்பாடுகளின் புள்ளிவிபரங்களை அட்டவணை II (ஈ) 15 காட்டுகின்றது.

## அட்டவணை II (ஈ) 15

### நீண்டகாலக் கொடுகடன் நிலையங்களினது கடன் வழங்கும் தொழிற்பாடுகள்

ஆயிரம் ரூபாய்களில்

| | 1967 | | 1968 | | 1969 | | 1670 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்கள் | வெளிநிற்கும் தொகை | வழங்கப்பட்ட கடன்கள் | வெளிநிற்கும் தொகை | வழங்கப்பட்ட கடன்கள் | வெளிநிற்கும் தொகை | வழங்கப்பட்ட கடன்கள் | வெளிநிற்கும் தொகை |
| அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (அ) ... | 3,150 | 29,154 | 7,273 | 31,716 | 19,561 | 47,982 | 27,083 | 70,920 |
| இலங்கைச் சேமிப்பு வங்கி... | 3,880 | 17,715 | 4,386 | 19,943 | 3,671 | 20,921 | 4,563 | 22,803 |
| கமத்தொழிற் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம் ... | 2,565 | 31,119 | 3,285 | 30,288 | 4,322 | 31,090 | 4,719 | 31,838* |
| அரசாங்க ஈட்டு வங்கி ... | 4,812 | 55,453 | 6,623 | 57,816 | 8,597 | 61,943 | 8,548* | 66,987* |
| கடன் சபை ... | 1,225 | 11,047 | 1,076 | 10,758 | 1,212 | 10,920 | 2,459 | 11,858 |
| தேசிய வீடமைப்புத் திணைக்களம் (ஆ) ... | 25,585 | 105,485 | 14,335 | 113,960 | 11,663 | 118,867 | 15,056 | 127,386 |
| மொத்தம் | 41,217 | 249,973 | 36,998 | 264,481 | 49,026 | 291,723 | 62,428 | 331,792 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) பங்கு முதலீடுகளையும் உட்படுத்தும்.

(ஆ) எண்தொகைகள் ஒற்றோபர் / செத்தெம்பர் நிதியாண்டுக்குரியவையாகும். வழங்கப்பட்ட கடன்களின் எண்தொகைகள் தனியாட்களுக்கும், கட்டடச் சங்கங்களுக்கும் வழங்கிய கடன்களை மட்டுமே எடுத்துக் காட்டுகின்றன. 1967-70 ஆண்டுகளுக்குரிய வெளிநின்ற தொகைகள் கட்டடச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை நீக்குவனவாகும்.

* தற்காலிகமானவை.

இந்நிலையங்களினுல் வழங்கப்பட்ட ரூ. 624 இலட்சம் கொண்ட மொத்தக் கடன்கள் சென்ற ஆண்டினதிலும் பார்க்க ரூ. 134 இலட்சம் அதிகமாக விருந்தன. அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினுல் வழங்கப்பட்ட கடன்களின் அதிகரிப்பு, மொத்த அதிகரிப்பில் ஏறக்குறைய 50 சதவீதமாக விளங்கியது. சென்ற ஆண்டிற்கு மாருக, தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினுல் வழங்கப்பட்ட கடன்களும் ரூ. 34 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. இலங்கைச் சேமிப்பு வங்கியினதும், கமத்தொழிற் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனத்தினதும், கடன் சபையினதும் கடன்களிலும் அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருக்கையில், தேசிய ஈட்டு வங்கியினுல் வழங்கப்பட்ட கடன்கள் சிறிதளவு வீழ்ச்சியுற்றன.

அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினுல் வழங்கப்பட்ட ரூ. 271 இலட்சம் கொண்ட தொகையில், ரூ. 43 இலட்சம் சர்வதேசப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கியுடன் ஒழுங்குசெய்யப்பட்டவாறு கொடுகடன் எடுப்பனவுகளிலிருந்து அந்நிய நாணயங்களில் நிதிஉதவி செய்யப்பெற்ற தொகையாகும். இக்கூட்டுத்தாபனத்தினுல் அளிக்கப்பட்ட ரூ. 228 இலட்சம்கொண்ட ரூபாக் கடன் உதவி, மத்திய வங்கியின் நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் நிதியிலிருந்து பெற்ற ரூ. 100 இலட்சம் கொண்ட எடுப்பனவுகளையும், அதன் வங்கிகளிடமிருந்து பெற்ற ரூ. 79 இலட்சம் மேலதிகப்பற்று / கடன்களையும், அதன் சொந்த நிதிகளிலிருந்து எடுத்த ரூ. 49 இலட்சத்தையும் கொண்டுள்ளது.

அட்டவணை II (ஈ) 16 1969ஆம் 70ஆம் ஆண்டுகளில் சேமிப்பு வைப்புக்களிலும், சேமிப்புச் சான்றிதழ்களிலும் நடைபெற்ற இயக்கங்களைச் சுருக்கித் தருகின்றது.

## அட்டவணை II (ஈ) 16

## சேமிப்பு வைப்புக்களும் சேமிப்புச் சான்றிதழ்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | திசெம்பர் 1968 | திசெம்பர் 1969 | திசெம்பர் 1970 | மாற்றம் திசெம்பர் 1969-70 |
|---|---|---|---|---|
| அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி ... | 473.3 | 490.5 | 574.2(அ) | + 83.7 |
| இலங்கை சேமிப்பு வங்கி ... | 100.3 | 102.3 | 108.9(ஆ) | + 6.6 |
| வர்த்தக வங்கிகள் (தவணை சேமிப்பு வைப்புக்கள்)** ... | 826.2 | 985.6 | 1,168.6 | + 183.0 |
| வெளிநின்ற சேமிப்புச் சான்றிதழ்கள் ... | 91.3 | 86.3 | 73.8(ஆ) | — 12.5 |
| மொத்தம் ... | 1,491.1 | 1,664.7 | 1,925.5 | + 260.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) நவெம்பர் மாதத்துக்கான எண்தொகை.
(ஆ) தற்காலிகமானவை.
** அரசாங்க வைப்புக்களை உள்ளடக்கும்.

1970இல் ஊழியர் சேமநிதியினுல் பெறப்பட்ட மொத்த உதவுதொகைகள் ரூ. 1,068 இலட்சமாக விளங்கின. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டில் இத்தொகைகள் ரூ. 919 இலட்சமாக விளங்கின.

## 4. தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்கள்

மத்திய வங்கியானது, இலங்கையிலுள்ள தவணைக்-கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்களின் தொழிற்பாடுகளைப் பற்றிய ஓர் அளவையை நடாத்துகின்றது. இவ் அளவையினால் பெறப்பட்டுள்ள இவற்றின் தொழிற்பாடுகளின் பிரதான அம்சங்களை 1969இன் இறுதி இரு காலாண்டுகளிலும், 1970இன் முதலிரு காலாண்டுகளிலும் உள்ளவாறு அட்டவணை II (ஈ) 17 தருகின்றது. ஆயினும், சில கூட்டுநிலையங்களின் அளவை விவரங்களில் சில குறைகளும், முரண்பாடுகளும் உள்ளனவென்பது கவனிக்கத்தக்கது. ஆகவே, இவ் அளவை விவரங்களைப் பாகுபடுத்திப் பெறப்பட்ட விளைவுகள் தற்காலிகமானவையாகும்.

### அட்டவணை II (ஈ) 17

### தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்களின் தொழிற்பாடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1969 செத்தெம்பர் 30இல் உள்ளவாறு | 1969 திசம்பர் 31இல் உள்ளவாறு | 1970 மாச்சு 31இல் உள்ளவாறு | 1970 யூன் 30இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| 1. வைப்புப் பொறுப்புக்கள் ... | 43.2 | 50.1 | 54.0 | 58.8 |
| 2. தவணைக் கொள்வனவு வியாபாரத்தின் வெளிநின்ற தொகை ... | 71.9 | 79.4 | 75.1 | 84.4 |
| 3. வெளிநின்ற கடன்களின் தொகை ... | 13.1 | 16.5 | 17.9 | 19.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1969 செத்தெம்பர் இறுதிக்கும் 1970 யூன் இறுதிக்குமிடையில் தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்களில் பொதுமக்களினது வைப்புக்களின் வெளிநின்ற தொகை ரூ. 156 இலட்சத்தால் அல்லது 36.1 சதவீதத்தால் உயர்வுற்றது. பொதுமக்களின் வைப்புக்கள் மொத்தப் பொறுப்புக்களின் விகிதமாக, 1969 செத்தெம்பர் இறுதியில் ஏறக்குறைய 42 சதவீதத்திலிருந்து 1970 யூன் இறுதியில் ஏறக்குறைய 48 சதவீதமாக உயர்வுற்றுள்ளனவென்பதையும் இவ் அளவை காட்டுகின்றது. விரும்பத்தக்க வட்டி வீதங்களின் அடிப்படையில், இக்கூட்டுநிலையங்கள் குறிப்பிடத்தக்களவு வைப்புக்களைப் பொதுமக்களிடமிருந்து பெறக்கூடியனவாயுள்ளன. பெரிய கூட்டுநிலையங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட வைப்புக்களின்மீது ஆண்டொன்றுக்கு 10 தொடக்கம் 12 வரையான சதவீதத்தைக் கொடுக்கும்பொழுது, சில சிறு கூட்டுநிலையங்கள் மேலுங் கூடிய வீதங்களை வழங்குகின்றனவென்று இவ் அளவையிலிருந்து பெறப்படுகின்றது.

கொடுகடன் தொழிற்பாடுகளில், தவணைக் கொள்வனவு நிதி உதவி 1970 யூன் இறுதியில் வெளிநிற்கும் தொகை ரூ. 844 இலட்சமாக அமைந்து முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. இத்தொகை, செத்தெம்பர் இறுதியில் ரூ. 719 இலட்சமாக அமைந்து அதன்பின் 17.4 சதவீதத்தால் உயர்வுற்றுள்ளது. நடாத்தப்பெற்ற தவணைக் கொள்வனவு வியாபாரம், ஏறக்குறைய முற்றிலும் மோட்டார் வாகனங்களிலும், விவசாய இயந்திரங்களிலும் ஏற்பட்டதாகும். தவணைக் கொள்வனவு வியாபாரத்தின் வெளிநின்ற தொகையில், கைத்தொழில் இயந்திரத்திற்கும், நீண்டகால வீட்டுப் பாவிப்புக்கள் ஆகியவற்றிற்குமான நிதி உதவி, 1 சதவீதத்திலும் குறைவுற்றிருந்தது. நிதி, ஏனைய கட்டணங்கள் உட்பட தவணைக் கொள்வனவின்மீதான வட்டி ஆண்டொன்றிற்குப் 12 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்குமிடையில் வேறுபடுகின்றது. (இவ்வட்டி வீதங்கள் 'ஒரே நிலையான' வீதங்களாகும்; செல்லுபடியான வீதங்கள் இன்னும் கூடியனவாகும்).

சில கூட்டுநிலையங்களால் மட்டுமே கடன்கள் வழங்கப்படுகின்றன. வெளிநிற்கும் கடன்கள் 1969 செத்தெம்பர் இறுதியில் ரூ. 131 இலட்சத்திலிருந்து ஏறக்குறைய 50 சதவீதத்தால் 1970 யூன் இறுதியில் ரூ. 194 இலட்சமாக அதிகரித்துள்ளன. கடன்கள்மீதான வட்டி வீதங்கள் ஆண்டொன்றிற்கு 10 இலிருந்து 15 சதவீதத்திற்கு வேறுபடுகின்றன.

## 5. மத்திய வங்கியின் தொழிற்பாடு

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில், மத்திய வங்கியின் இருப்புச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் ரூ. 1,483 இலட்சம் அல்லது 4.7 சதவீதம்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு, உள்நாட்டு இருப்புச் சொத்துக்களிலுள்ள ரூ. 1,195 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும், பன்னாட்டு ஒதுக்கிலுள்ள ரூ. 288 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்குகின்றது.

அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகளிலுள்ள ரூ. 1,262 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும், அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்களின் ரூ. 258 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும், அரசாங்கத்திற்கான விசேட கடன்களின் ரூ. 37 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்கிய உள்நாட்டு இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு 'ஏனைய இருப்புச் சொத்துக்களிலும் கணக்குகளிலும்' ஏற்பட்ட ரூ. 349 இலட்சம் கொண்ட வீழ்ச்சியாலும், வர்த்தக வங்கிகளுக்கான முற்பணங்களின் ரூ 13 இலட்சம்* கொண்ட வீழ்ச்சியினாலும் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. அரசாங்கத்திற்கு மேலதிக நிதி வளங்களை ஏற்பாடுசெய்தமை மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவிற்குக் காரணமாயிருந்தது.

பொறுப்புக்கள் பகுதியில். வெளிநாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற ரூ. 1,556 இலட்சம்கொண்ட கடன்பாடுகளின் அதிகரிப்பு, பன்னாட்டு அமைப்புக்களினது வைப்புக்களின் ரூ. 1,061 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினால் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டு, வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ரூ. 495 இலட்சம் கொண்ட தேறிய அதிகரிப்பை விளைவித்தது. நாணய வெளியீட்டின் ரூ. 1,223 இலட்சம்கொண்ட வீழ்ச்சியினால் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்ட உள்நாட்டுப் பொறுப்புக்களின் ரூ 988 இலட்சம்கொண்ட அதிகரிப்பு பிரதானமாக வர்த்தக வங்கி வைப்புக்களின் ரூ. 874 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும், அரசாங்க வைப்புக்களின் ரூ. 480 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், 'ஏனைய பொறுப்புக்களினதும் கணக்குகளினதும்' ரூ. 820 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்குகின்றது. நாணய வெளியீட்டின் வீழ்ச்சிக்குப் பண மதிப்பு நீக்கமே பிரதான காரணமாகும்.

கட்டுப்பாடுடைய பண விரிவைப் பெறுவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு நடவடிக்கையாக, மத்திய வங்கியானது, அதன் தேறிய உள்நாட்டு இருப்புச் சொத்துக்களின்மீது எல்லையைக் கடைப்பிடிக்கும் ஒரு கொள்கையைத் தொடர்ந்தும் பின்பற்றியது. இத்தேவைக்காகத் தேறிய உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் அரசாங்கத்திற்கான விசேட கடன்களையும், தற்காலிக முற்பணங்களையும், மத்திய வங்கியின் அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள், இறைசேரி உண்டியல்கள் ஆகிய உடைமைகளையும், வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களையும், முற்பணங்களையும் (விவசாயக் கொடுகடன் திட்டம், உத்தரவாத விலைத் திட்டம் ஆகியவற்றின்கீழ் வழங்கப்பட்ட முற்பணங்களைத் தவிர்த்து) கொண்ட தொகையிலிருந்து அரசாங்க வைப்புக்களையும், மத்திய வங்கியிலுள்ள அந்நிய அரசாங்கக் கணக்குகளின் நிலுவைகளையும் கழித்த தொகையைக் கொண்டுள்ளன.

---

* 1970ஆம் ஆண்டில், நடுத்தர – நீண்டகாலக் கொடுகடன் நிதியிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களில், ரூ. 56 இலட்சம்கொண்ட அதிகரிப்பை உள்ளடக்கமாட்டா. மத்திய வங்கி ஐந்தொகையில், நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதி நிலுவைகள் 'ஏனைய பொறுப்புக்களிலும் கணக்குகளிலும்' கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன; இதன் விளைவாக இந்நிதியிலிருந்து வழங்கப்பட்ட முற்பணங்கள் ஐந்தொகையிலுள்ள ஏனையவற்றிற்கான (வர்த்தக வங்கிகள்) என்ற விடயத்தில் காட்டப்பட்டுள்ளன.

ஏற்கெனவே குறிக்கப்பட்டுள்ள வங்கிவீத அதிகரிப்பைத்தவிர்த்து, 1968ஆம் 1969ஆம் ஆண்டறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ள மத்திய வங்கிக் கொடுகடன் கொள்கையில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை. வர்த்தக வங்கிக் கொடு கடன் மீதான எல்லைகள் 1969 யூனில் திருத்தியமைக்கப்பட்டவாறே, 1970 இலும் நடைமுறையிலிருந்தன. திருத்தியமைக்கப்பட்ட எல்லைகளின் கீழான கொடுகடனின் அடிப்படை எண்தொகைகள் அரசாங்கக் கூட்டுத்தாபனங் களுக்கு ரூ. 217 இலட்சமாகவும், ஏனைய தனியார் துறைக்கு ரூ. 955 இலட் சமாகவுமிருந்தன. இதன் தொடர்பான ஆண்டு எல்லைகள் முறையே ரூ. 272 இலட்சமும், ரூ. 1,023 இலட்சமுமாகும். 1969 திசெம்பர் இறுதியிலும், 1970 திசெம்பரிலும் வெளிநின்ற கொடுகடனின் உண்மையான தொகைகள் அட்டவணை II (ஈ) 18இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை II (ஈ) 18**

**தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்**
(மாத இறுதியில் உள்ளபடியான வெளிநின்ற தொகைகள்)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1969 திசெம்பர் | 1970 திசெம்பர் |
|---|---|---|
| **அ. எல்லைகளுக்குட்பட்ட கொடுகடன்** | | |
| I. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 214.7 | 220.0 |
| II. ஏனைய தனியார் துறை | | |
| 1. ஏற்றுமதிகள், சுற்றுலாப் பயண முன்னேற்றம், தேயிலை உற்பத்தி ஆகியவற்றிற்கான முற்பணங்கள் ... | 235.1 | 235.7 |
| 2. ஏனைய முற்பணங்கள் ... | 712.2 | 652.3 |
| 3. இறக்குமதி உண்டியல்கள் ... | 55.0 | 27.8 |
| 4. உள்ளூர் உண்டியல்கள் ... | 17.6 | 13.8 |
| எல்லைகளுக்குட்பட்ட ஏனைய தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் ... | 1,019.9 | 929.6 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும், எல்லைகளுக்குட்பட்ட ஏனைய தனியார் துறைக்குமான மொத்தக் கொடுகடன் ... | 1,234.6 | 1,149.6 |
| **ஆ. எல்லைகளிலிருந்து விலக்கப்பட்ட கொடுகடன்** | | |
| 1. ஏற்றுமதி உண்டியல்கள் ... | 85.9 | 106.5 |
| 2. விவசாயக் கொடுகடன் திட்டத்தின் கீழான கடன்கள் ... | 73.8 | 79.2 |
| 3. பொருள் வரவு முற்பணங்கள் ... | 8.8 | 153.1 |
| 4. கூட்டுறவுக்கான சந்தைக்கனுப்பல் முற்பணங்கள் ... | 1.0 | 2.3 |
| 5. தேயிலைத் தொழிற்சாலை புதுப்பித்தலுக்கான கடன்கள் ... | 16.3 | 26.2 |
| 6. கமத்தொழிலுக்கும் கைத்தொழிலுக்குமான நடுத்தர நீண்ட காலக் கடன்கள் | | |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 39.0 | 77.0 |
| ஏனையவை ... | 90.5 | 123.8 |
| எல்லைகளிலிருந்து விலக்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 315.3 | 568.1 |
| தனியார் துறைக்கான எல்லாக் கொடுகடன்களும் ... | 1,549.9 | 1,717.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1969 திசெம்பருக்கும் 1970 திசெம்பருக்குமிடையில் எல்லைகளுக்குட்பட்ட கொடுகடன் ரூ. 850 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், எல்லைகளிலிருந்து விலக்கப்பட்ட கொடுகடன் ரூ. 2,528 இலட்சத்தால் உயர்வுற்று, தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனில் ரூ. 1678 இலட்சம் கொண்ட அதி கரிப்பை விளைவித்தது. உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நெற் கொள்வன விற்காக வழங்கப்பட்ட பொருள் வரவு முற்பணங்களின் அதிகரிப்பு, எல்லை களிலிருந்து விலக்கப்பட்ட கொடுகடனின் பெரும்பகுதி அதிகரிப்பிற்குக்

காரணமாயிருக்கையில், கைத்தொழிலுக்கும், விவசாயத்திற்குமான நடுத்தர நீண்ட காலக் கடன்களிலும் ரூ. 713 இலட்சம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது. எல்லைகளிலிருந்து விலக்கப்பட்ட ஏனைய சகல கொடுகடன் விடயங்களும் சாதாரண அதிகரிப்புக்களைக் காட்டின.

நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் நிதியிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கும், ஏனைய கொடுகடன் நிலையங்களுக்கும் வழங்கப்பட்ட மீளநிதியிடல் கடன்கள், 1969இன் ரூ. 347 இலட்சத்திற்கு மாருக, 1970இல் ரூ. 223 இலட்சமாக விளங்கின. இத்தொகை, தேயிலைத் தொழிற்சாலையைப் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ரூ. 105 இலட்சம்கொண்ட தொகையை உள்ளடக்குகின்றது; இதன் வெளிநாட்டு நாணயப் பங்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிஞல் நிதிஉதவி செய்யப்பட்டுள்ளது. கைத்தொழில் தேவைகளுக்கு வழங்கப்பட்ட மீளநிதியிடல் கடன்கள் ரூ. 105 இலட்சமாகும். இத்தொகையில் ரூ. 105 இலட்சம் கொண்ட மிகப் பெரும் பகுதி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திஞல் பெறப்பட்டது. வர்த்தக வங்கிகள் 1969இல் ரூ. 135 இலட்சம்கொண்ட கைத்தொழில் மீளநிதியிடல் கடன்களைப் பயன்படுத்தியமைக்கு மாருக, 1970இல் ரூ. 15 இலட்சமாக மட்டுமே விளங்கின.

1970ஆம் ஆண்டில், பொது ஒதுக்குகளிலிருந்து நீண்ட காலக் கொடுகடன் நிதிக்கு மாற்றங்கள் ஒன்றும் செய்யப்படவில்லை. இந்நிதியின் ஆரம்பத்திலிருந்து வழங்கப்பட்ட மொத்த நிதியிடல் கடன்களில், 1970 திசெம்பரில் வெளிநிற்கும் தொகை ரூ. 548 இலட்சமாகும். 1970 திசெம்பர் இறுதியில், இந்நிதியிலுள்ள நிலுவை ரூ. 53 இலட்சமாக விளங்கியது.

## 6. வங்கித்தொழில் அபிவிருத்தி

1970/71ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட உரையின்படி, அரசாங்கமானது, 1969ஆம் ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ள அநேக ஏற்பாடுகளைச் செயற்படுத்த எண்ணியுள்ளது.

சிறிது காலத்தில் தேசிய சேமிப்பு வங்கி நிறுவப்படும். விவசாய நோக்கங்களுக்கு மட்டும் கொடுகடன் அளிப்பதற்காக, தேசிய ஈட்டு வங்கியும், கமத்தொழிற் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனமும் விவசாய அபிவிருத்தி வங்கி என்ற பெயரின்கீழ் இணைக்கப்படும். தேசிய அபிவிருத்தி வங்கியும் நிறுவப்படும். பொதுமக்கள் துறையில், கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் அளிப்பதே இதன் பிரதான கடமையாகும். இது, மத்திய வங்கியின் முழு உடைமையிலுள்ள துணை நிலையமாகும்.

பொருளாதார முயற்சிக்கு நிதி உதவி செய்வதன்பொருட்டு இலங்கை வங்கியும். மக்கள் வங்கியும் பரந்தளவு, கூடியதிறமையுடன் பணியாற்றுவதற்கு இடமளிப்பதற்காக, இவ்விரு வங்கிகளினையும் ஆளும் சட்டம் திருத்தியமைக்கப்படும். வைப்புக் காப்புறுதித் திட்டத்தை அளிப்பதற்காக நாணய விதிச் சட்டமும் திருத்தியமைக்கப்படும். வர்த்தக வங்கிகளினது புதிய கிளைகளின் இட அமைப்பையும், நிறுவுவதையும் பற்றிய கொள்கையை இணைப்பதற்கு இச்சட்டம் மேலும் திருத்தியமைக்கப்படும்.

வழமையாக ஏற்றுமதிசெய்யும் பொருட்கள் அல்லாதனவற்றின் தேவையை முதன்மையாக நிறைவேற்றவும், சாதாரணமாக வர்த்தக வங்கிகளுடன் தொடர்புகொள்ளமுடியாத மக்களுக்கு வசதிகளையளிப்பதற்காகவும், ஏற்று

மதி—இறக்குமதி வங்கியை நிறுவுவதற்கான தனது எண்ணத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். இதன் கடமைகள் விவசாயம், கைத்தொழில் அல்லது வர்த்தகத்தின் அபிவிருத்தித் திட்டத்தைப்பற்றி அவ்வளவு இல்லாது, பெரிய நிலையங்களினுல் கையாளப்படாத ஏற்றுமதிக் கொடு கடன் உத்தரவாதங்கள் போன்ற பொருட்களை ஏற்றியிறக்குவதற்கான வசதியை அளிப்பதாகும். இவ்வங்கி, தனது வாடிக்கைக்காரரின் சார்பில் இலங்கையிலும், வெளிநாட்டிலும் புதிய ஏற்றுமதிக் கிளைகளை நிறுவுவதிலும், சந்தை ஆராய்ச்சி செய்வதிலும் ஈடுபடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுவான நாணயக் கொள்கையின் செயற்படுத்தும் திறனை நிலைநாட்டவும், நிதி நிலையங்களுள் போட்டியிடும் தொகுதிகளின் சமநிலையை முறைப்படுத்துவதற்கும் வைப்பாளரின் நலனைப் பாதுகாப்பதற்காக அத்தகைய நிலையங்களின் திரவத்தன்மையையும், கடன்தீர்க்கும் பொறுப்பையும் உறுதிப்படுத்துவதற்குமாக, மத்திய வங்கியானது, இலங்கையிலுள்ள தவணைக் கொள்வனவு, நிதி ஆகியவற்றின் கூட்டுநிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளை வகுத்துள்ளது. இவ்வேற்பாடுகள் அரசாங்கத்தினுல் ஏற்கப்பட்டு, இவற்றைச் செயற்படுத்தும் மசோதா விரைவில் வரையப்படும்.

நம்பிக்கை வருவாய் வாய்ப்புக்களின் மூலம் உள்நாட்டு வர்த்தகத்திற்கு நிதி உதவி செய்யும்பொருட்டு 1947ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க நம்பிக்கை வருவாய்க் கட்டளைச் சட்டத்தை (அத்தியாயம் 86) திருத்தியமைப்பதற்கான ஏற்பாடுகள் முடிவாக்கப்பட்டு, மாதிரி மசோதா ஒன்று அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.